வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

MARUTHI MONEY EXCHANGE
மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 27.10.2021 புதன்கிழமை | இதழ் : 326 | பக்கங்கள் : 16

## உள்ளூர் இழுவைமடியை தடை செய்யும் கருத்து;

# சுமந்திரனுக்கு எதிராக குருநகரில் போராட்டம்

## உருவ பொம்மையும் எரிப்பு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 27

உள்ளூர் இழுவைப் படகுகள் தொழிலில் ஈடுபடுவது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து குருநகரில் கறுப்புக் கொடி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

15



# கொரோனா தொற்றால் மேலும் 14 பேர் மரணம்

கொழும்பு, ஒக். 27

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 14 பேர் உயிரிழந்தனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 9 ஆண்களும், 5 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

அந்தவகையில், 30 வயதுக்குட்பட்டவர்களில் ஆண் ஒருவரும், 30 தொடக்கம் 59 வயதுக்கிடைப்பட்டவர்களில் ஓர் ஆணும்,

15

# வடமராட்சியில் விபத்து; இளம் குடும்பஸ்தர் பலி!

வடமராட்சி, ஒக். 27

வடமராட்சியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்து ஒன்றில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

முள்ளிப் பாலத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே இந்த விபத்து நேர்ந்ததாகக் கூறப்படுகின்றது.

இந்த விபத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி வீதியை சேர்ந்த பொன்னுத்துரை காண்டீபன் (வயது 40) என்பவரே உயிரிழந்தார்.

15

# இலங்கை – இந்திய நட்புறவுக்கு பாதிப்பின்றி மீனவர் பிரச்சனைக்கு தீர்வு காணப்படவேண்டும்

## அரசின் நிலைப்பாடு இதுவே என்கிறார் ரமேஷ் பத்திரண

கொழும்பு, ஒக். 27

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பான பிரச்னையை இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவுகளுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு, இராஜதந்திர ரீதியில் தீர்த்துக்கொள்வதற்கு இலங்கை அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது என அமைச்சரவை இணைப் பேச்சாளரான அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில், அரச தகவல் திணைக்

15

# பிஸ்டல் ரவை வைத்திருந்தாரென பருத்தித்துறையில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 27

கைத்துப்பாக்கிக்கு பயன்படுத்தும் ரவைகளை உடைமையில் வைத்திருந்த ஒருவர் பருத்தித்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை அம்பன் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய ஒருவரே நேற்று மாலை 6 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் அவசர உத

15

# அதிகார முன்னுரிமை பட்டியலில் மத்திய வங்கி ஆளுநர் 5ஆம் இடம்

கொழும்பு, ஒக். 27

நாட்டின் அதிகார முன்னுரிமைப் பட்டியலின் 5ஆவது இடத்தில் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இடம்பிடித்துள்ளார்.

ஜனாதிபதி, பிரதமர்,

15

# தடுப்பூசி பெறாதோர் பொது இடங்களில் ஒன்றுகூடுவதை தடுப்பதற்கு சட்டம்!

## தீவிரமாக பரிசீலனை செய்கின்றது அரசு

கொழும்பு, ஒக். 27

கோவிட் தடுப்பூசி ஒன்றைக்கூட இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் பொது இடங்களில் கூடுவதைத் தடுக்கும் வகையிலான சட்டங்களை அறிமுகப்படுத்துவது குறித்து பரிசீலிப்பதாக அரசாங்கம் எச்சரித்துள்ளது.

கோவிட் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுமாறு எவரையும் வற்புறுத்த முடியாது.

ஒவ்வொருவருக்கும் தமது வாழ்க்கையை தீர்மானிக்கும் உரிமை உள்ளது. அதே வேளை, இன்னொருவரின் உயிரைப் பறிப்பதற்கு

15

# இலங்கையின் ரயில் போக்குவரத்து மேம்பாட்டுக்கு உதவுகிறது இந்தியா!

கொழும்பு, ஒக். 27

இலங்கையின் ரயில் போக்குவரத்து துறையை மேம்படுத்துவதற்கு தேவையான உதவிகளை வழங்கத் தயார் என இந்திய தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

உலகின் மிகவும் மேம்

15

# அழுது புலம்பும் அரச பங்காளிகள்!

## கிண்டலடிக்கிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஒக். 27

"அரச பங்காளிக்கட்சிகள் அழுது, புலம்பி ஊடக கண்காட்சியையே நடத்திவருகின்றன. மாறாக இதுவரை ஒரு போராட்டத்தைக்கூட அந்தக் கட்சிகள் நடத்தியது கிடையாது."- என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம நிறைவேற்று அதிகாரியான முன்னாள் இராஜாங்க அமைச்சர் அஜித் பி பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

அரசிலுள்ள பங்

15

# பல்கலைக்கழகங்களை மீளஆரம்பிக்க அனுமதி!

கொழும்பு, ஒக். 27

நவம்பர் முதலாம் திகதி முதல் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அனுமதி

15

வீட்டிற்கும் வேலைக்கும் வாசற்படியில்
Door to Door delivery
Any time Including Curfew
தங்கும் அறைகள், உணவகம்/Rooms & Restaurant
இறைச்சி கோழி
Vironthu @ Yarl Pardy
49-51 அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். Amman Road, Nallur, Jaffna.
அறுசுவை உணவுகளை பெற்றுக்கொள்ள அழையுங்கள்
077 734 0026
021 222 6868

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# மரண அறிவித்தல்கள்

மலர்வு 20 – 06 – 1939



உதிர்வு 23 – 10 – 2021

## அப்பாசியர் இராமச்சந்திரன்

யாழ்ப்பாணம் மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு எல்லை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாசியர் இராமச்சந்திரன் அவர்கள் 23.10.2021 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாசியர் – பாக்கியம் தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் – யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காந்தரூபி அவர்களின் அன்புக் கணவரும்,ஞானேஸ்வரி, சந்திரகாந்தா, சந்திரவதனா, சந்திரகலா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசுப்பிரமணியம், காலஞ்சென்றவர்களான அருள்வேல், நவமணி, ஐஸ்வரியா மற்றும் நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும்,யோகவேல், காலஞ்சென்ற யோகேஸ்வரன், சுரேந்திரன், அருட்செல்வன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், மகாலிங்கம் மற்றும் பரமலிங்கம், சாந்தலிங்கம், பத்மாவதி, வசந்திமாலா ஆகியோரின் அன்பு மைத்துனரும்,புருஷோத்மன், மதுஷன், திலக்ஷனா, அக்ஷனா, அக்ஷயா, இனியவன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (28.10.2021) வியாழக்கிழமை அன்று பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கள்ளியங்காடு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**பிரேமா - மகள்**
**Mobile : +94767575855**
**Phone : +94652222734**

தகவல்:
**குடும்பத்தினர்**

---

மலர்வு 27 – 04 – 1960



உதிர்வு 24 – 10 – 2021

## சிவநேசன் கணபதிப்பிள்ளை (சிவா)

யாழ்ப்பாணம் பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், கனடா Montreal ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சிவநேசன் கணபதிப்பிள்ளை அவர்கள் 24-10-2021 ஞாயிற்றுக்கிழமை அன்று கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை(நவசிவாயம்) – செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசையா– கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயந்தாமதியின் பாசமிகு கணவரும், கௌதமி, கௌசிகன், கௌரித்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிறேமன் அன்ட்றோ அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, கந்தசாமி ஆகியோரின் அன்பு மருமகனும், தவமணி, காலஞ்சென்ற சிவஞானசுந்தரம், பரமேஸ்வரி, சிவபாதசுந்தரம், சிவபாலசுப்பிரமணியம், சிறீஸ்கந்தராஜா, சிவராஜசிங்கம், காலஞ்சென்ற சிவராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கலாமோகன், கலாமதி, வளர்மதி, ஜெயமோகன், சிறீமோகன், சிறீஸ்கந்த மதி, ஹென்சி மோகன், வான்மதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

**பார்வைக்கு**
Saturday, 30 Oct 2021 4:00 PM - 9:00 PM
Sunday, 31 Oct 2021 9:00 AM - 10:30 AM
Complexe Funéraire Aeterna et Crématorium 55 Rue Gince, Saint-Laurent, QC H4N 1J7, Canada

**கிரியை**
Sunday, 31 Oct 2021 10:30 AM - 12:30 PM
Complexe Funéraire Aeterna et Crématorium 55 Rue Gince, Saint-Laurent, QC H4N 1J7, Canada

**தகனம்**
Sunday, 31 Oct 2021 12:30 PM - 1:00 PM
Urgel Bourgie / Athos - Cimetière jardin & Complexe funéraire Montréal 3955 Chemin de la Côte-de-Liesse, Saint-Laurent, QC H4N 2N6, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**ராஜன் - சகோதரன்**
**Mobile : +14386229466**

தகவல்:
**குடும்பத்தினர்**

---

# “253 மருத்துவ உத்தியோகத்தர்கள் வடக்கு மாகாணத்துக்கு நியமனம்!”

*வடக்கு மாகாணத்தின் மருத்துவமனைகளில் நிலவும் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறைகளை நீக்கும் பொருட்டு 253 பேர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.*

*இது தொடர்பில் அவர் நேற்று அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில்,*

*வட மாகாணத்தில் நீண்ட காலமாக மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை நிலவி வந்தது. குறிப்பாக பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள மருத்துவமனைகளில் மிகமோசமான பற்றாக்குறை காணப்பட்டது. இந்நிலையில் கடந்த ஒக்ரோபர் 22 ஆம் திகதி நாடு முழுவதும் ஒரு தொகுதி மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு புதிதாக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.*

*இந்த நியமனத்தில் வட மாகாணத்திற்கு 253 மருத்துவ உத்தியோகத்தர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதில், யாழ். போதனா மருத்துவமனைக்கு 62 மருத்துவ உத்தியோகத்தர்களும், வட மாகாண சுகாதார திணைக்களத்தின் கீழ் இயங்கும் மருத்துவமனைகளுக்கு 191 மருத்துவ உத்தியோகத்தர்களும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*இதில், யாழ். மாவட்ட சுகாதார திணைக்களத்தின்கீழ் உள்ள மருத்துவமனைகளுக்கு 57 பேரும், கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைகளுக்கு 28 பேரும், முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைகளுக்கு 24 பேரும், மன்னார் மாவட்ட மருத்துவமனைகளுக்கு 35 பேரும், வவுனியா மாவட்ட மருத்துவமனைகளுக்கு 47 பேரும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர் - என்றுள்ளது.* (ஐ - 03)

## இந்திய...

*இந்திய அமைதிப் படையை...*
*(03ஆம் பக்கத் தொடர்ச்சி)*
*கொக்குவில் இந்துக் கல்லூரிக்குள் அடைக்கலம் தேடியிருந்தனர்.*

*யுத்த டாங்கிகளின் இரைச்சலுடனும் கண்மூடித்தனமான ஆட்லறி தாக்குதல்களுடனும் கொக்குவில் கிராமத்தை மிக அவதானத்தோடு இந்திய படையினர் நெருங்கினர்.*

*ஏனெனில், கொக்குவில் கிராமத்தின் பிரம்படி பகுதியில் பிரபாகரன் தங்கியிருந்தமை மற்றும் அங்கே இந்திய கொமாண்டோக்களின் முதல் தொகுதியினர் கொல்லப்பட்டமை காரணமாக கொக்குவிலை கடுமையான சுற்றிவளைப்பு தாக்குதல் மூலமாகவே இந்திய படையினர் அணுகியிருந்தனர்.*

*அப்போது, கொக்குவில் இந்துக் கல்லூரியை அண்டிய பகுதிகளில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல்களைத் தொடுத்தமை காரணமாக இந்திய யுத்த டாங்கி ஒன்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட இடியோசையை ஒத்த பீரங்கிப் பிரயோகத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் வகுப்பறை ஒன்றுக்குள் தங்கியிருந்தவர்களில் 26 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இவர்களில் பெண்கள், சிறுவர்களும் அடங்கியிருந்தனர்.*

*எனவே, இந்திய இராணுவத்தை சன்னதம் கொள்ள வைத்த கொக்குவில் கிராமம் இந்திய படை நகர்வின் போது நிறையவே விலை கொடுத்திருந்தது. கொக்குவில் அனர்த்தத்தின் 34 வருடகாலம் தற்போதைய ஒக்ரோபர் மாதத்துடன் பூர்த்தியாகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.*

---

கல்வி tv CHANNEL-1

**27.10.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**27.10.2021**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
27.10.2021 புதன்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 10

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## வாரிசுகளின் அரசியல்?

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புதல்வர் மாகாண சபை தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடவுள்ளார் என்று செய்திகள் வெளியாகியிருக்கின்றன. மைத்திரியின் புதல்வரும் தனது அரசியல் பிரவேசம் தொடர்பில் பேசியிருக்கின்றார். இதே வேளை, மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, மாகாண சபை தேர்தலில் தனித்து போட்டியிடவுள்ளதாகவும் அறிவித்திருக்கின்றது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முடிவு ஏற்கனேவே அறியப்பட்ட ஒன்றுதான்.

இலங்கையின் சிங்கள அரசியல் வரலாற்றிலிருந்து வாரிசு அரசியலை பிரிக்க முடியாது. ஏனெனில், தென்னிலங்கை அரசியல் என்பதே வாரிசுகளின் அரசியல்தான். சேனநாயக்க பரம்பரையும் பண்டாரநாயக்க பரம்பரையுமே, இலங்கையை நீண்டகாலமாக மாறி, மாறி ஆட்சி செய்திருக்கின்றன. இதில், புதிதாக வந்திருப்பவர்கள்தான் மெதமுல்லை ராஜபக்ஷ பரம்பரை. மஹிந்த ராஜபக்ஷவின் வழியாக இப்போது அவரின் ஒரு சகோதரர் ஜனாதிபதியாக இருக்கின்றார். இதன் தொடர்ச்சியாக பிறிதொரு சகோதரரான பஸில் ராஜபக்ஷவும் அரியணை ஏறலாம். இதன் தொடர்ச்சியாக மஹிந்தவின் புதல்வர் நாமல் ராஜபக்ஷ அரியணைக்காக காத்துக் கொண்டிருக்கின்றார். தென்னிலங்கையின் அரசியல் வரலாற்றில் சேனநாயக்க, பண்டாரநாயக்க குடும்பத்தினருக்கு பின்னர், ராஜபக்ஷ பரம்பரை என்பதை அடையாளப்படுத்துவதில் அவர்கள் வெற்றிபெற்றிருக்கின்றனர். சஜித் பிரேமதாஸவும் வாரிசு அரசியலின் நீட்சிதான். எனினும், பிரேமதாஸ என்பது சிங்கள அரசியல் பரம்பரை ஒன்றின் குறீயிடல்ல.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் மைத்திரிபாலவின் புதல்வரும் அரசியல் களத்திற்குள் பிரவேசிக்கப் போகின்றார். நாமல் ராஜபக்ஷவிற்கு அவரின் ‘ஜனாதிபதி தந்தையார்’ கவசமாக இருப்பது போன்று, மைத்திரியின் புதல்வருக்கு அவரின் ‘ஜனாதிபதி தந்தையார்’ கவசமாக இருக்கப் போகின்றார். அரசாங்கத்தின் செல்வாக்கு இறங்கு நிலையிலிருக்கின்றபோது, மைத்திரியின் புதல்வர் போன்றவர்களுக்கு வாய்ப்புக்கள் வரலாம் என்று அவர்கள் கணிக்கக்கூடும்.

தமிழ்த் தேசிய அரசியல் வரலாற்றில் வாரிசு அரசியல் என்பது பெரியளவில் மேலாதிக்கம் பெறமுடியவில்லை. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கு பின்னர் அவரின் புதல்வாரன சந்திரகாசன் அரசியலில் பிரகாசிக்க முற்பட்டார். எனினும், அவரின் முயற்சி வெற்றியளிக்கவில்லை. இந்தியா நேரடியாக தலையீடு செய்தகாலத்தில், சந்திரகாசனின் பெயர் மிகவும் பிரபலமாக இருந்தது. விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவின் தலைவர் பொறுப்பை அவருக்கு வழங்குமாறு நிபந்தனை விதிக்கப்பட்டதாக, அன்ரன் பாலசிங்கம் தனது ‘போரும் சமாதானமும்’ நூலில் விபரித்திருக்கின்றார். இது தொடர்பில் சந்திரகாசன் இதுவரை பதிலளிக்கவில்லை.

சந்திரகாசன் ரெலோவுடன் நெருங்கிய தொடர்புகளை கொண்டிருந்தாரென தகவல்களுண்டு. எனினும், மிதவாத அரசியலோ அல்லது ஆயுத அமைப்புகளிலோ சந்திரகாசனால் தனக்கான தனித்துவமானதோர் இருப்பை உருவாக்கிக்கொள்ள முடியவில்லை. செல்வநாயகத்தின் வாரிசின் அரசியல் முற்றிலுமாக தோல்வியடைந்தது. தமிழ் சூழலில் ஓரளவு வாரிசு அரசியலில் வெற்றிபெற முடிந்தவர் என்றால், அது ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் பேரன் ஒருவர்தான். இந்தப் பின்புலத்தில் நோக்கினால் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் பரம்பரை ஒன்றுதான் இப்போதும் தமிழ் அரசியல் பரப்பில் நிலைகொண்டிருக்கின்றது. அவரும் மிகவும் கடினமான உழைப்பின் பின்னர்தான் இந்த இடத்திற்கு வந்திருக்கின்றார்.

சிங்கள மக்களைபோல், தமிழ் மக்கள் வாரிசு கவர்ச்சியில் பெரியளவில் ஈடுபாடு காட்டுவதில்லை. இதன் காரணமாகவே – அவருக்கு பின்னர் இவர் – என்னும் அடிப்படையில் தமிழ் அரசியலில் எவருமே செல்வாக்கு செலுத்த முடியவில்லை. அரசியலை தமிழ் மக்கள் ஒரு குடும்ப விவகாரமாக நோக்குவதில்லை. இந்த விடயத்தில் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு முன்னேறிய பார்வையுண்டு என்பதை மறுக்க முடியாது.

ஒரு நேரடி அனுபவம் :

# இந்திய அமைதி படையை சன்னதம் கொள்ளவைத்த கொக்குவில் கிராமம்!

-அனந்த பாலகிட்ணர்-




இந்திய அமைதிப் படை இலங்கை - இந்திய அமைதி ஒப்பந்தத்தை வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அமுல்படுத்த பலாலி விமான நிலையம் ஊடாகவும் காங்கேசன் துறைமுகம் ஊடாகவும் யாழ்ப்பாண குடாநாட்டை வந்தடைந்திருந்தது.

இதனையடுத்து படிப்படியாக அமைதி குறித்து நம்பிக்கை தரும் நிகழ்வுகள் இடம்பெற ஆரம்பித்தன. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சார்பில் யோகி என்றறியப்பட்ட யோகரத்தினம் கைத்துப்பாக்கியை இந்திய தளபதிகளிடம் கையளித்து தமது தரப்பின் ஆயுதங்கள் பலவற்றையும் ஒப்படைத்திருந்தார்.

இருந்தபோதிலும் 1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இந்திய அமைதிப் படையினருக்கும் , தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நிலவிய புரிந்துணர்வு மிகச்சில நாட்களே நீண்டிருந்தன.

அச்சமயம் இந்தியா செல்ல முற்படுகையில் கைதான சில முக்கிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை கொழும்பு கொண்டு செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது அவர்கள் சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்டனர். இதனையடுத்து, தமிழீழ விடுதலைப் புலிகள் இந்திய அமைதிப் படையினருடன் மோதலில் குதித்தனர்.

இதனையடுத்து கொக்குவில் பிரதேசத்தின் பிரம்படி பகுதியிலுள்ள வீடொன்றில் தங்கியிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனை உயிரோடு பிடிப்பது அல்லது அவரை சடலமாக கைப்பற்றுவதென இந்திய இராணுவம் செயலில் இறங்கியது.

1987- ஒக்ரோபர் 13ஆம் திகதி இந்திய கொமாண்டோக்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தலைவரை மடக்கிப் பிடிக்கும் நடவடிக்கையில் குதித்திருந்தனர். ஹெலிகொப்டர்களில் கொக்குவில் மயானத்துக்கு அருகேயுள்ள பல்கலைக்கழக மைதானத்தில் அதிகாலை 2 மணியளவில் வந்திறங்கிய இந்திய கொமாண்டோக்கள் அச்சுற்றாடலில் அமைந்திருந்த பிரம்படி கிராமத்தை நோக்கி நகர ஆரம்பிக்கலானார்கள்.

ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் இந்திய கொமாண்டோக்கள் பிரம்படி கிராமத்துக்குள் நுழைய முன்னரே தங்கியிருந்த வீட்டிலிருந்து தப்பிச் சென்றிருந்தார்.

அப்போது, கொக்குவிலில் இருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் கடுமையான தாக்குதலுக்கு தாக்குப்பிடிக்க முடியாத இந்திய சீக்கிய கொமாண்டோக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். அச்சமயம் பிரம்படி கிராமத்துக்குள் பிரவேசித்திருந்த சில கொமாண்டோக்கள் அங்கு வீடு வீடாகச் சென்று தாக்குதல்களை தொடுத்திருந்தனர்.

அப்போது பிரம்படியில் 40 பேர் வரை பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அவ்வாறு கொல்லப்பட்டவர்கள் நினைவாக நினைவுத் தூபி ஒன்று கொக்குவில் ஆடியபாதம் வீதியில் பிரம்படி ஒழுங்கைக்கு எதிரே அமைக்கப்பட்டுள்ளதை இன்றும்கூட காணமுடியும். அத்துடன், கடந்த வாரம் அந்தத் தூபியருகே பிரம்படி கிராமத்தில் இந்திய இராணுவத்தினரால் கொல்லப்பட்டவர்கள் ஞாபகமாக அஞ்சலி செலுத்தப்பட்டிருந்தது.

எனவே, கொக்குவில் பிரம்படி பகுதியில் பிரபாகரனை தேடிப்பிடிக்கும் நடவடிக்கையில் தோல்விகண்ட இந்திய இராணுவம் முழு அளவில் யாழ்ப்பாணத்தை கைப்பற்றும் முயற்சியில் ‘ஒப்ரேஷன் பவான்’ என்ற இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்திருந்தது.

இந்த நிலையில் இந்திய அமைதிப் படையினரை சன்னதம் கொள்ள வைத்த பிரதேசமாகவே கொக்குவில் பிரம்படி கிராமம் இன்றுவரை கருதப்பட்டு வருகின்றது.

இதனையடுத்து முழு அளவில் யாழ்ப்பாணத்தை நோக்கி நகர ஆரம்பித்த இந்திய படையினர் கொக்குவில் கிராமத்தை காங்கேசன்துறை வீதி ஊடாக நெருங்க ஆரம்பித்தனர். அச்சமயம் கொக்குவில் வாசிகள் மற்றும் அயல் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என ஏறத்தாழ ஐந்தாயிரம் பேர் வரை

(02ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஒக்ரோபர் - 27 புதன்கிழமை
பிலவ வருடம் - ஐப்பசி - 10
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : சப்தமி




**மேடம்**
ஆன்மிக பெரியோரின் ஆசி கிடைக்கும். உங்களின் அந்தஸ்து உயரும். முன்பு உங்களை வாழ்வில் உயர்த்தியவருக்கு நன்மை செய்வீர்கள். பழைய சிக்கலில் ஒன்று தீர்ந்து நிம்மதி அளிக்கும்.

**இடபம்**
வீடு களைகட்டும் வகையில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். இளைஞர்களுக்குப் பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நீங்கள் மதிப்பவர் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்.

**மிதுனம்**
பணியாளர்களுக்கு சிறப்பான நாள். மகிழ்ச்சி அதிகரிக்கும். உங்கள் செயல்பாட்டு முறைகளில் மாற்றம் செய்வீர்கள். உங்களைத் தவறாக நினைத்துக் கொண்டிருந்தவர் மனம் மாறுவார்.

**கடகம்**
ஆன்மிகத்தில் நாட்டம் ஏற்படும். உறவினர், நண்பர்களால் குழந்தைகளின் முன்னேற்றத்தில் நன்மை உண்டு. அடுத்தடுத்து பெறும் வெற்றியால் மனதில் மகிழ்ச்சி பெருகும்.

**சிம்மம்**
பணியிடத்தில் உங்கள் திறமையை மேலதிகாரிகள் உணர்வார்கள். எதிர்பாலினத்தினர் உங்களுக்கு உதவுவர். பொது மக்களின் நன்மைகளுக்கான செயல்களில் ஈடுபடுவீர்கள்.

**கன்னி**
இளைஞர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். உங்களின் தொழில் சிறக்கும். உறவினர்கள் மூலம் செலவுகள் வரக்கூடும். உங்களின் புத்திசாலித்தனம் வெளிப்படும்படியான செயலை செய்வீர்கள்.

**துலாம்**
குழந்தைகளுக்கு நன்மைகள் ஏற்படும். சுப நிகழ்ச்சிகளுக்கு திட்டமிடுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தாயாருக்கு ஏற்பட்ட உடல் நிலை பாதிப்பு சரியாகும்.

**விருட்சிகம்**
பணியிடத்தில் நண்பர்களால் ஏற்பட்ட மனஸ்தாபம் தீரும். வியாபாரிகளின் திட்டம் தாமதத்துக்குப் பிறகு வெற்றியாகும். நன்கு யோசித்துப் பேசினால் சிரமமற்ற நாள்.

**தனுசு**
இன்றைய நிகழ்வுகள் மனதிற்கு இதமளிக்கும். பாராட்டை எதிர்பார்க்க வேண்டாம். தொழிலில் புதிய முதலீடுகள் செய்வதற்குமுன் நன்கு யோசியுங்கள்.

**மகரம்**
பங்குச் சந்தை முதலீட்டில் திடீர் ஈடுபாடு வரும். இளைஞர்களின் திறமை மேம்படும். கலகலப்பான நாள். எதையும் முயன்றே அடைவீர்கள். வெற்றி மகிழ்ச்சி தரும்.

**கும்பம்**
குடும்ப ஒற்றுமை காரணமாக மனதில் சந்தோஷம் ஏற்படும். இயந்திரங்கள், வாகனத்தை இயக்கும் போது நிதானம் அவசியம். செலவுகள் நன்மை தரும். புதிய வாகனம் வாங்குவீர்கள்.

**மீனம்**
பெற்றோர் உடல்நலன் பற்றி இருந்து வந்த கவலை தீரும். முடிவு எடுப்பதானால் அனுபவசாலியின் ஆலோசனையைப் பெறுங்கள். நண்பர்களுக்கு ஆலோசனைகள் வழங்கி தெளிவு படுத்துவீர்கள்.

# தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றிய மாதாந்த அறிக்கை வெளியிட வேண்டும்

## ஸ்டாலினை வலியுறுத்துகிறார் கமல்ஹாசன்

சென்னை, ஒக். 27,

சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. அரசு கொடுத்த தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டதன் 'மாதாந்த அறிக்கை' வழங்குவதை உறுதி செய்யுங்கள் என்று மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், "2021 சட்டமன்றத் தேர்தலில் தமிழக மக்களுக்கு தி.மு.க 505 வாக்குறுதிகளை அளித்திருந்தது. ஒவ்வொரு மாதத்தின் முதல் பணி நாளன்றும், தேர்தல் அறிக்கை வாக்குறுதிகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி விரிவான ஆய்வை முதலமைச்சர் மேற்கொள்வார். அதனைத் தொடர்ந்து ஊடகங்களைச் சந்தித்து சாதனை அறிக்கையை



ஊடகங்களுக்கு வழங்குவார்" என்று சொல்கிறது அந்த வாக்குறுதி.

தி.மு.க அரசு பதவியேற்று இன்றுடன் 173 நாட்கள் ஆகியுள்ளன. இதுவரை 200 வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டன என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஊடக சந்திப்புகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்புக் கூட்டங்களில் தெரிவித்துவருகிறார். ஆனால், 'திட்டங்கள் செயலாக்க அமைச்சகம் அமைக்கப்படும் மற்றும் மாதந்தோறும் ஊடகங்களிடம் அறிக்கை வழங்கப்படும்' என்ற முக்கியத்துவம் வாய்ந்த வாக்குறுதி இதுவரை செயல்படுத்தப் படவில்லை.

வரும் நவம்பர் -1 திங்கட்கிழமை மாதத்தின் முதல் பணி நாளாகவே அமைகிறது. அந்த நாளுக்கு வேறொரு வரலாற்று முக்கியத்துவமும் உண்டு. அந்நாளில்தான் மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. இந்தச் சிறப்புமிக்க நாளில் இருந்து, மேற்குறிப்பிட்ட தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றிய அறிக்கையை ஊடகங்களுக்கு வழங்கும் வாக்குறுதியை நிறைவேற்ற ஆவன செய்ய வேண்டுமென்று தமிழக முதலமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்" என்று கமல்ஹாசன் அதில் தெரிவித்துள்ளார்.

# சசிகலாவை அ.தி.மு.கவில் சேர்ப்பது என்ற கேள்விக்கே இடமில்லை

## அ.தி.மு.க. துணை ஒருங்கிணைப்பாளர் திட்டவட்டம்

சென்னை, ஒக். 28,

அ.தி.மு.க.வில் சசிகலாவை மீண்டும் சேர்க்கும் கேள்விக்கே இடமில்லை என அந்தக் கட்சியின் துணை ஒருங்கிணைப்பாளர் .பி.முனுசாமி எம்.எல்.ஏ. நேற்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

முனுசாமி கிருஷ்ணகிரியில் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

சசிகலாவை மீண்டும் கட்சியில் சேர்க்க கூடாது என ஒரு தெளிவான முடிவை ஏற்கனவே தலைமை கழக நிர்வாகிகள் நிறைவேற்றி உள்ளனர். இது தொடர்பாக அனைத்து மாவட்டங்களிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சசிகலாவிற்கு ஆதரவாக செயல்பட்ட நிர்வாகிகளும் வெளியேற்றப்பட்டுள்ளனர். எனவே, சசிகலாவை மீண்டும் சேர்க்கும் கேள்விக்கே இடமில்லை.

சசிகலாவிற்கு உண்மையாகவே அ.தி.மு.க. மீது பற்று இருந்தால், அவர் ஜெயலலிதாவிடம், நானோ எங்கள் குடும்பத்தினரோ அரசியலுக்கு வரமாட்டோம் என கடிதம் கொடுத்தார். அதன்படி நடந்து கொள்ள வேண்டும். கட்சியை சிறப்பாக நடத்துங்கள் என கூறினால் ஜெய



லலிதாவிற்கு உண்மையான சகோதரியாக சசிகலா இருப்பார்.

தேர்தலில் வெற்றி பெற்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பேசும் போது நாங்களும் மகிழ்ந்தோம். எதிர்கட்சியினர் எங்களை பாராட்டு வார்கள் என கூறினார். ஆனால், செயல்பாட்டுக்கு வரும்போது எதிர்மாறாக செயல்படுகிறார். இதனை எதிர்கட்சியாகிய நாங்களும் கவனித்து வருகிறோம். தலைமை கழக நிர்வாகிகளுடன் கலந்து பேசி போராட்டங்களில் ஈடுபடுவோம். எனத் தெரிவித்தார்.

# முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கரிடம் பொலிஸார் 8 மணி நேரம் விசாரணை!



சென்னை, ஒக். 27,

ஆலந்தூர் லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் தமிழக முன்னாள் போக்குவரத்து துறை அமைச்சர் விஜயபாஸ்கரிடம் எட்டு மணி நேரம் விசாரணை நடைபெற்றது. இலஞ்ச ஒழிப்புத்துறை பொலிஸார் இந்த விசாரணையை மேற்கொண்டனர்.

விஜயபாஸ்கர், அளவுக்கு அதிகமாக சொத்து குவித்ததாக புகார்கள் வந்தன. இதையடுத்து கடந்த ஜூலை மாதம் 22 இல் விஜயபாஸ்கர் வீடு உள்பட 26 இடங்களில் இலஞ்ச ஒழிப்பு பொலிஸார் சோதனை நடத்தினர். அப்போது ரூ.25 லட்சம் மற்றும் சில ஆவணங்கள் கைப்பற்றப் பட்டதாக கூறப்படுகிறது.

இதுதொடர்பாக விஜயபாஸ்கர், அவருடைய மனைவி விஜயலட்சுமி, தம்பி சேகர் ஆகியோர் மீது சொத்து குவிப்பு வழக்குப்பதிவு செய்யப் பட்டது. இந்த வழக்கு தொடர்பாக விசாரிக்க வேண்டும் என்பதற்காக கடந்த செப்ரெம்பர் 30 இல் நேரில் ஆஜராக இலஞ்ச ஒழிப்பு துறை அழைப்பாணை அனுப்பினார்கள். ஆனால், ஊரக உள்ளாட்சி தேர்தல் காரணமாக அவர் ஆஜராகவில்லை.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் காலை 10.50 மணியளவில் விஜயபாஸ்கர் தனது சட்டத்தரணிகளுடன் ஆலந்தூரில் உள்ள இலஞ்ச ஒழிப்பு அலுவலகத்துக்கு வந்தார். காலை 11 மணிக்கு ஆரம்பமான விசாரணை இரவு 7 மணிக்கு முடிந்தது. இதன் தொடர்ச்சியாக நேற்றும் விசாரணைகள் இடம்பெற்றது.

# மீண்டும் சிமெந்து தட்டுப்பாடு!

## அதிக விலையில் விற்றால் சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஒக். 27

சந்தையில் மீண்டும் சிமெந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் அதனை அதிக விலையில் விற்பவர்களுக்கு எதிராக சட்ட நவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சந்தையில் சிமெந்துக்கு தட்டுப்பாடு நிலவுவதால் தற்போது கட்டட நிர்மாணத்துறைக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சில வர்த்தக நிலையங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சிமெந்து விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சந்தையில் தற்போது சிமெந்து மூடையொன்று 1,200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

எவ்வாறாயினும், அதிக விலையில் விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கும் நோக்கில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையால் நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதேநேரம் இந்தச் சுற்றிவளைப்புகளை மேலும் அதிகரிப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார். (அ)

# பல்கலை கல்வி நடவடிக்கைகளை நவம்பர் 1 இல் ஆரம்பிக்க அனுமதி

கொழும்பு, ஒக். 27

நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் பல்கலைக்கழகக் கல்வி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனை ஆரம்பிப்பது பற்றிய நாளைத் தீர்மானிக்கும் அதிகாரம் ஒவ்வொரு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

"முதல் கட்டத்தின் கீழ், 2 வாரங்களுக்கு கோவிட்-19 தடுப்பூசியின் இரண்டு அலகுகளையும் போட்ட மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கழகங்களுக்குள் நுழைய அனுமதிக்கப்படுகிறார்கள்.

கல்வி நடவடிக்கைகளில் முதலில் 25 வீதமான மாணவர்களே பங்கேற்கவேண்டும்" என்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார். (அ)

# கட்சி முடிவெடுத்தால் நாளையே அரசிலிருந்து வெளியேற தயார்!

## மஹிந்த அமரவீர கூறுகிறார்



**கொழும்பு, ஒக். 27**

**"அரசிலிருந்து வெளியேறுவதற்கு கட்சி முடிவெடுத்தால் பதவிகளை துறந்துவிட்டு, நாளையே வெளியேறுவதற்குத் தயார்." - என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உப தலைவரும், அமைச்சருமான மஹிந்த அமரவீர அறிவித்துள்ளார்.**

சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசிலிருந்து வெளியேறவேண்டும் என தெரிவிக்கப்பட்டு வரும் கருத்துகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உரப்பிரச்னை மற்றும் அதிபர், ஆசிரியர்களின் போராட்டம் ஆகியன தொடர்பில் நாம் விமர்சனங்களை முன்வைத்தோம். இது சிலருக்கு வலித்திருக்கலாம். இதனால் அரசியிலிருந்து வெளியேறி விமர்சனங்களை முன்வைக்குமாறு வலியுறுத்திவருகின்றனர்.

எமது கட்சி தீர்மானித்தால் பதவிகளை துறந்துவிட்டு நாளையே வெளியேறுவதற்கு நாம் தயார். எனினும், அத்த கையதொரு முடிவை கட்சி இன்னும் எடுக்கவில்லை. நாடு தொடர்பில் நாம் அதிகம் சிந்திப்பதாலேயே பொறுமை காத்துவருகின்றோம்.

அரசிலிருந்து வெளியேறிய பிறகு நாம் எங்கு செல்வது? சஜித்துக்கு பின்னால் சென்று, கைப்பாவையான அவரை ஜனாதிபதியாக்குவதா என்ற பிரச்னை எமக்கு உள்ளது. அதேபோல தோல்வியடைந்த தலைவரான ரணிலை மீண்டும் பலப்படுத்துவதா என்ற பிரச்னையும் உள்ளது-என்றார்.

# நிதி கிடைத்தால் பயிரழிவுகளுக்கு இழப்பீட்டு தொகை வழங்கப்படும்

## கமத்தொழில் காப்புறுதி சபை தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக். 27

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த கால போகத்தின் போது ஏற்பட்ட பயிரழிவுகளுக்கு இதுவரை இழப்பீடுகள் எதுவும் வழங்கப்படவில்லை. அதற்கான நிதி கிடைக்கும் பட்சத்தில் இழப்பீட்டுக் கொடுப்பனவுகளை வழங்க முடியும் என கமநல மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டு ஏற்பட்ட புயல் மற்றும் காலநிலை மாற்றம் காரணமாக 1025 ஏக்கர் நெற்செய்கை, 400 ஏக்கர் வரையான மறு வயற்பயிர்கள், 150 ஏக்கர் வரையான பழப் பயிர்கள், 82 ஏக்கர் வரையான மரக்கறிச் செய்கைகள் என்பன அழிவடைந்துள்ளன.

இந்த நிலையில் இவற்றுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் எவையும் இதுவரை வழங்கப்படாத நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு இழப்பீடுகள் வழங்கப்படாமையால் சம்பந்தப்பட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிப்புகளை எதிர்கொள்வோர் தங்களுக்கான இழப்பீட்டை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர்கள் கோரியுள்ளனர்.

கடந்த பெரும் போகத்தின் போது ஏற்பட்ட அழிவுகளுக்கான இழப்பீடுகள் நாடளாவிய ரீதியில் இதுவரை வழங்கப்படாத நிலை காணப்படுகின்றது.

அதற்கான நிதி கிடைக்கும் சந்தர்ப்பத்தில் மேற்படி இழப்பீடுகளை வழங்க முடியுமென காப்புறுதிச் சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போலி யூரோ தாள்களுடன் இரு சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஒக். 27

தெமட்டகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஒரு மில்லியன் போலி யூரோ நாணயத்தாள்களுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றுக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போதே குறித்த நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கொட்டுகொடை பிரதேசத்தைச் சேர்ந்த ஆணொருவரும், வெல்லம்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய பெண்ணொருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட போலி யூரோ நாணயத்தாள்களை தெமட்டகொடை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

# மீள அரசியலுக்கு வருவாரா துமிந்த?

கொழும்பு, ஒக். 27

எதிர்காலத்தில் தான் அரசியலுக்கு வருவேனா, இல்லையா என்பது தனக்கு தெரியாது என வீடமைப்பு அதிகார சபையின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான துமிந்த சில்வா தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற வீடமைப்புத் திட்டம் தொடர்பான வேலைத்திட்டத்தின் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அர்ப்பணிப்புடன் வேலை செய்வதால், வீடமைப்பு அதிகார சபை என்னிடம் வழங்கப்பட்டுள்ளது. வீடமைப்பு அதிகார சபை தற்போது சிறந்த நிறுவனமாக மாறியுள்ளது.

எதிர்காலத்தில் 70 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது-என்றார்.

முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த துமிந்த சில்வா, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பொது மன்னிப்பின் கீழ் அண்மையில் விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலை செய்யப்பட்ட பின்னர் அரசாங்கம் அவருக்கு வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் பதவியை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடு செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையில் திடீர் அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 27

வெளிநாடுகளுக்கு செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

உயர்கல்விக்காக வெளிநாடு செல்லக் கோரிக்கை விடுக்கும் மாணவர்களின் எண்ணிக்கையே இவ்வாறு அதிகரித்துள்ளது.

வெளிநாடு செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை எப்போதும் இல்லாதளவு தற்போது அதிகரித்துள்ளதாக பரீட்சை திணைக்களத்தின் தகவல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கு முன்னர் தினசரி விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 350 ஆக காணப்பட்டது. எனினும் தற்போது அவ்வாறு விண்ணப்பிக்கும் மாணவர்களின் கோரிக்கை ஆயிரத்தை கடந்துள்ளதாக பரீட்சை திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# 67 நாள்களில் 1116 பில்லியன் ரூபா ரயில் திணைக்களத்துக்கு நட்டம்!

கொழும்பு, ஒக். 26

நாட்டில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக ரயில் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த நிலையில் கடந்த 67 நாள்களில் ரயில் திணைக்களத்துக்கு 1,116 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

வழமையாக ஒரு நாளில் ரயில் திணைக்களத்துக்கு 16 மில்லியன் ரூபா வருமானம் கிடைக்கும் நிலையில் ஒரு மாதத்துக்கான வருமானம் 500 மில்லியன் ரூபாவை தாண்டும் என்றும் அவர் கூறினார்.

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக கடந்த 67 தினங்களாக தற்காலிகமாக ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் ரயில் திணைக்களத்துக்கு அதனால் பெருமளவு வருமானம் இழக்கப்பட்டுள்ளது.

ஈழநாடு



# இலங்கையில் 60 வீதமானவர்களுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவில்லை!

## ஆய்வில் வெளியானது தகவல்

கொழும்பு, ஒக். 27

**இலங்கையில் கோவிட்19 தொற்றுப்பரவல் காலத்தில் 60 வீதத்துக்கும் மேற்பட்டோருக்கு தரமான, ஊட்டச்சத்துள்ள உணவு கிடைக்கவில்லையென ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.**

உணவு உரிமை தொடர்பில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வரும் பியான் சிறிலங்கா (FIAN Sri Lanka)நிறுவனத்தினால் 10 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

பியான் சிறிலங்கா(FIAN Sri Lanka) உத்தியோகபூர்வ இணையத்தள அங்குரார்ப்பணமும் ஆய்வறிக்கை வெளியீடும் கடந்த வாரம் நிகழ்நிலையில் இடம்பெற்றது.

இதன்போது ஆய்வுகள் குறித்த தரவுகள் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் லக்ஷி கொடித்துவக்குவினால் வெளியிடப்பட்டன.

2020ஆம் ஆண்டு டிசெம்பர் முதலாம் திகதி முதல் 2021ஆம் ஆண்டு ஜனவரி 30ஆம் திகதி வரை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், புத்தளம், கம்பஹா, கொழும்பு, களுத்துறை, காலி, மட்டக்களப்பு, கண்டி, நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்களில் நகர்ப்புறம், கிராமப்புறம், மத்திம கிராமப்புறம், பெருந்தோட்டம் ஆகிய மக்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவுகள் குறித்த கலந்துரையாடலின் போது தெரிவிக்கப்பட்டன.

அதனடிப்படையில் 486 பேரிடம் நேரடியாகவும், எழுத்துமூலமாகவும், தொலைபேசி வாயிலாகவும் பெற்றுக் கொள்ளப்பட்ட தகரவுகளில் 60 வீதத்துக்கும் மேற்பட்டோருக்கு தரமான, ஊட்டச்சத்துள்ள உணவு கிடைக்கவில்லையென தெரியவந்துள்ளது.

மேலும், கோவிட்19 தொற்றுப்பரவல் காலத்தில் 71 வீதமானோர் குறைந்த விலையுடைய உணவுகளையும் 69 வீதமானோர் வாராந்தம் ஐவேளை உணவை மாத்திரமே எடுத்துக் கொண்டுள்ளனர். அத்துடன், 17 வீதமானோர் வாரத்தில் ஓரிரு நாள்கள் உணவின்றி இருந்துள்ளதாகவும் ஆய்வறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுப் பரவல் காலத்தில் மக்களின் செலவுகள் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் 16 வீதமான மக்கள் மருத்துவச் செலவுகளை குறைத்துக் கொண்டுள்ளனர். நாற்பத்தைந்து வீதமானோர் தமது பிள்ளைகளின் கல்விச் செலவை குறைத்துக் கொண்டுள்ளனர். மேலும், 57 வீதமானார் கடன் பெற்றுக் கொண்டுள்ளதுடன்,4 வீதமானோர் வீட்டு உபகரணங்களை விற்பனை செய்துள்ளதுடன், 3 வீதமானோர் வீடு அல்லது காணியை விற்பனை செய்துள்ளனர்.

அத்துடன், கொரோனா தொற்றுப் பரவல் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் 11.9 வீதமானோர், தொற்று எவ்வாறு ஏற்பட்டதெனத் தெரியாது என பதிலளித்துள்ளனர். 17.1 வீதமானோருக்கு குடும்ப உறுப்பினர்களாலும் 42.8 வீதமானோருக்கு வேலைத் தளங்களிலும் கொரோனா தொற்று பரவியுள்ளது. மேலும் 11.1 வீதமானோருக்கு நிகழ்வுகளில் பங்கேற்றதன் காரணமாகவும் 20.1 வீதமானோருக்கு பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தியதன் காரணமாகவும் 24.3 வீதமா னோருக்கு பொது இடங்களில் நடமாடியதன் காரணமாகவும் தொற்று பரவியுள்ளது.

மேலும், கொரோனா தொற்றுப் பரவல் காலத்தில் ஒன்லைன் ஊடாகவே கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அவ்வாறு 45 வீதமான மாணவர்களுக்கு மாத்திரமே ஒன்லைன் கல்வி கிடைத்ததாகவும் 55 வீதமான மாணவர்களுக்கு ஒன்லைன் கல்வி கிடைக்கவில்லையென்றும் ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

ஒன்லைன் கல்வியைப் பொறுத்தவரை புத்தளம் மாவட்டத்தில் 90 வீதமான மாணவர்கள் அதில் பங்கேற்றுள்ளனர். நுவரெலியாவில் 28 வீதமான மாணவர்களும் மட்டக்களப்பில் 19 வீதமான மாணவர்களும் பதுளையில் 9 வீதமான மாணவர்களும் மாத்திரமே ஒன்லைன் கல்வியில் ஈடுபட்டுள்ளனர் என ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த நிகழ்வில் பங்கேற்ற சிரேஷ்ட உளநல வைத்திய நிபுணர் கமல் வல்கம கொரோனா தொற்றுப் பரவல் காலத்தில் மக்கள் எதிர்கொண்டுள்ள உளநலம் சார்ந்த பிரச்னைகளை எடுத்துக்கூறினார்.

“தற்போது உளநலம் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. சிறு குழந்தைகள்முதல் முதியோர்வரை பாதிப்புக்குள்ளாகின்றனர். ஆய்வறிக்கையின் பிரகாரம் பெரும் எண்ணிக்கையிலானோருக்கு ஊட்டச்சத்துள்ள உணவு கிடைக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது. பொருளாதார சிக்கல்களுடன் உணவைப் பெற்றுக் கொள்வதிலுள்ள சவால்களும் உளநலம் பாதிக்கப்படுவதற்கு காரணமாக அமைகின்றன” என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சமுதாய வைத்திய நிபுணர் முரளி வல்லிபுரநாதன் தமது கருத்துகளை பதிவுசெய்தார்.

“அரசாங்கம் கோவிட்19 ஐ கட்டுப்படுத்துவதற்கு முழுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டதாக கூறிவிட முடியாது. கொரோனா தொற்றுப் பரவல் காலத்தில் குடும்ப வன்முறை மிக அதிமாகக் காணப்பட்டது. மதுப்பாவனையை கட்டுப்படுத்தாமல் அதனை மறைமுகமாக ஊக்குவித்ததன் காரணமாகவும் வீட்டு வன்முறைகள் நிகழ்ந்தன. கொலைகள் கூட இடம்பெற்றன. கொரோனாவை கட்டுப்படுத்துவதில் அரசாங்கத்தின் தோல்வியின் ஒரு பகுதியையாக இதனைச் சொல்லாம்” என்றார்.

மேலும், நாட்டின் பல்வேறு மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நிபுணர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் உரை நிகழ்த்தினர்.

# மன்னாரில் பெரும்போகத்துக்கான முதலாவது நீர்விநியோகம் ஆரம்பம்

மன்னார், ஒக். 27

மன்னார் மாவட்டத்தில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான பெரும் போக பயிர்ச்செய்கைக்கான முதலாவது நீர் விநியோகம் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பெரும் போகத்துக்காக 31,339 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட உள்ள நிலையிலே முதலாவது நீர் விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் 2 ஆவது பெரிய குளமான முருங்கன் கட்டுக்கரைக்குளம் 11 ஆம் கட்டை துருசு பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் சர்வ மதத் தலைவர்களின் ஆசியுடன் நீர் திறந்து விடப்பட்டது.

இதன்போது மன்னார் மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் என்.யோகராஜா, முருங்கன் கட்டுக்கரை குளம் நீர்ப்பாசன பொறியியலாளர் பி.அருள்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தற்போது கட்டுக்கரைக் குளத்தில் 9 அடி நீர் காணப்படுகிறது.மேலும் கட்டுக்கரை குளத்துக்கு நீர்வரத்து காணப்படுகின்றது.

இந்த நிலையில் கடந்த 14 ஆம் திகதி மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய முதலாவது நீர்விநியோகமானது நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# அசாத் சாலியின் மறியல் நீடிப்பு

கொழும்பு, ஒக். 27

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட, மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலியின் விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் 9 ஆம் திகதி இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கலந்துகொண்டு ஷரீஆ சட்டம் குறித்து சர்ச்சையான கருத்தொன்றை அவர் வெளியிட்டிருந்தார்.

அந்த கருத்து இன முரண்பாட்டை ஏற்படுத்துவதாக தெரிவித்து மார்ச் 16 ஆம் திகதி சி.ஐ.டி.யினரால் அவர் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் தொடர்ந்தும் விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ள அவரை மீண்டும் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# செட்டிகுளம் பிரதேச செயலக திட்டமிடல் கிளை மூடப்பட்டது

வவுனியா, ஒக். 27

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் கிளை கோவிட் அச்சுறுத்தல் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்ட இருவக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கோவிட் தொற்றுக்கான அறிகுறிகள் தென்பட்டதையடுத்து அவர்கள் மேற்கொண்ட அன்ரிஜென் பரிசோதனையிலேயே அவர்களுக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து அவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் கிளை மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

# நாட்டில் சனிக்கிழமைகளிலும் பாடசாலைகளை நடத்த திட்டம்

கொழும்பு, ஒக். 27

நாட்டில் சனிக்கிழமைகளிலும் பாடசாலைகளை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கோவிட் காரணமாக பாடசாலைகள் காலம் தாழ்த்தி ஆரம்பிக்கப்பட்டபோதிலும் கல்வியாண்டுக்குள் பாடங்களை கற்றுக் கொடுக்க விசேட திட்டங்களை கல்வி அமைச்சு வகுத்துள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாற்று வழிகளைப் பயன்படுத்தி விடுபட்ட பாடங்களை கற்றுக் கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் விடுபட்ட பாடங்களைக் கற்றுக் கொடுக்க எதிர்பார்க்கப்படுகிறது.

சனிக்கிழமைகளிலும் பாடசாலைகளை திறந்தும், வேறு மாற்று வழிகளைப் பயன்படுத்தியும் விடுபட்ட பாடங்களை கற்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது- என்றார்.

(அ)

# மாதகல் கடலில் நங்கூரங்கள் திருடுவதற்கு வந்தவர்களை மடக்கிப்பிடித்தனர் மீனவர்கள்!

யாழ்ப்பாணம், ஒக். 27

மாதகல் கடலில் நங்கூரம் திருடுவதற்கு வந்த மூவர் அப்பகுதி மீனவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு இளவாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில்-

நேற்றுமுன்தினம் இரவு பட்டா ரக வாகனத்தில் வந்த மூவர் மாதகல் கடலில் உள்ள நங்கூரங்களை திருடுவதற்கு முயன்றனர்.

இதை அவதானித்த அப்பகுதி மீனவர்கள் அவர்களை துரத்திப் பிடித்தனர்.

நீங்கள் எதற்காக இங்கு வந்தீர்கள் என்று என்று மீனவர்கள் கேட்டவேளை “கடற்படையினர் எமக்கு இரண்டாயிரம் கிலோ இரும்பு தருவதாக கூறினர். எனவே அந்த இரும்பை எடுத்துச் செல்வதற்கே நாங்கள் இங்கு வந்தோம். நங்கூரம் என்றால் என்ன என்றே எமக்கு தெரியாது.” என்று அவர்கள் தெரிவித்தனர் என மீனவர்கள் கூறினர்.

இதனையடுத்து மீனவர்கள் இளவாலை பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். அவ்விடத்துக்கு வந்த பொலிஸார் மூவரையும் கைதுசெய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

இரும்பு வாங்க சென்றவர்களை காணவில்லை என தேடி அவர்களது உறவினர்கள் மாதகல் பகுதிக்கு வானில் சென்றனர்.

இதனை அவதானித்த மீனவர்கள் அவர்களை திருப்பி அனுப்பினர்.

இச்சம்பவம் தொடர்பாக மீனவர்கள் தெரிவிக்கையில்-

“நாங்கள் பல இலட்சம் ரூபா பெறுமதியான எமது உடைமைகள் அனைத்தையும் கடலிலேயே விட்டுச் செல்கின்றோம்.

வேறுபகுதியில் இருப்பவர்கள் வந்து இப்படி எமது கடலில் உள்ள உடைமைகளை திருடிச் சென்றால் நாங்கள் என்ன செய்வது?

“ஒவ்வொரு நங்கூரமும் ரூபா ஐயாயிரம் தொடக்கம் பதினைந்தாயிரம் ரூபா பெறுமதியுடையவை.

“நாங்கள் கடன்பட்டுத்தான் எமது தொழிலுக்கு தேவையான உபகரணங்களை வாங்குகின்றோம். இது இவ்வாறு இருக்க உடைமைகள் திருடப்பட்டால் நாங்கள் கடன் வாங்கியவர்களுக்கு என்ன பதில் சொல்வது?

எங்களுக்கு தொடர்ந்து இவ்வாறு அட்டூழியங்கள் நடக்குமானால் நாங்கள் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவேண்டிவரும்” - என்றனர். (அ)

# மைத்திரியுடன் மீண்டும் மேடையேற தயாரில்லை

## பொன்சேகா திட்டவட்டம்



கொழும்பு, ஒக். 27

**“ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து செயற்பட நாம் தயாரில்லை.”- என்று முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பி. அறிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஐக்கிய மக்கள் சக்திக்குள் கடும் மோதல் எதுவும் இல்லை என்றபோதிலும் அத்தகையதோர் நிலைமையை தோற்றுவிப்பதற்கு சிலர் முற்படுகின்றனர்.

இன்று அரசுக்குள்தான் உச்சகட்ட மோதல் ஏற்பட்டுள்ளது. பங்காளிக்கட்சிகள் வெவ்வேறான வழிகளில் பயணிக்கின்றன. சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் எம்முடன் இணையலாம். அவர்களுடன் பயணிப்போம்.

ஆனால் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் எவ்வித கொடுக்கல் - வாங்கல்களும் கிடையாது. அவருடன் மேடையேறுவதற்கு நான் தயாரில்லை - என்றார். (அ)

# இலங்கை - இந்திய கடற்படை தளபதிகள் சந்தித்து பேச்சு



கொழும்பு, ஒக். 27

இந்திய கடற்படையின் தென் பிராந்திய கட்டளைத் தளபதிக்கும், இலங்கையின் கடற்படைத் தளபதிக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இரு தரப்புப் பயிற்சிகளின் நிமித்தம், இந்திய கடற்படையின் ஆறு கப்பல்கள் இலங்கைக்கு வந்துள்ளன.

இந்த நிலையில் குறித்த பயிற்சிகளை பார்வையிடும் முகமாக அந்த நாட்டின் தென் பிராந்திய கட்டளைத் தளபதி அனில் குமார் சௌலா இலங்கைக்கு வந்துள்ளார்.

இலங்கையின் கடற்படைத் தளபதியை நேற்றுமுன்தினம் சந்தித்தபோது இரண்டு நாட்டு கடற்படைகளின் ஒத்துழைப்பு குறித்து பேசப்பட்டதாக இலங்கையின் கடற்படை தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் தங்கியிருக்கும் காலத்தில் சௌலா, இலங்கையின் வெளியுறவுச்செயலாளர், வான்படைத் தளபதி, ஆகியோரையும் சந்திக்கவுள்ளார்.

அத்துடன் நாளை வியாழக்கிழமை இலங்கையில் இருந்து புறப்படும் முன்னர் திருகோணமலைக்கும் அவர் செல்லவுள்ளார் என தெரியருகிறது. (அ)

# திரவ நைதரசன் இறக்குமதியில் மோசடி இடம்பெறவே இல்லை!

## அமைச்சரவை பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 27

திரவ நனோ நைதரசன் உரத்தை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விவகாரத்தில் எவ்வித மோசடியும் இடம்பெறவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

உர இறக்குமதியில் பெரும் பண மோசடி இடம்பெற்றுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டிவரும் நிலையில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அமைச்சர் ரமேஷ் பத்திரண இதனை தெரிவித்தார்.

மேலும் இறக்குமதி செய்யப்பட்ட உரத்தின் விலை உள்ளிட்ட விடயங்கள் குறித்த உண்மை நாட்டுக்கு வெளிப்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

நைதரசன் உரத்தை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டபோதிலும், அதன் தரம் தொடர்பாக ஏற்பட்ட சிக்கலால் அந்த திட்டம் நிராகரிக்கப்பட்டது என்றும் அமைச்சர் ரமேஷ் பத்திரண குறிப்பிட்டார்.

இதனால் விவசாயிகள் எதிர்கொண்ட நெருக்கடிகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்கும் வகையிலேயே திரவ நனோ நைதரசன் உரத்தை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் அவர் கூறினார். (அ)

# சீன நிறுவன சேதன பசளையை மீளாய்வுக்கு உட்படுத்த இணக்கம்

கொழும்பு, ஒக். 27

சீன நிறுவனத்தின் சேதனப் பசளையை இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் நிறுவனமொன்றுக்கு அனுப்பி மீளஆய்வுக்கு உட்படுத்த இணக்கம் காணப்பட்டுள்ளதாக விவசாய இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள ஆய்வுக்கூடங்களில் முன்னெடுக்கப்படும் ஆய்வுகளின் முடிவுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என சீன நிறுவனம் தெரிவித்துள்ளதாக சஷீந்திர ராஜபக்ஷ குறிப்பிட்டார். (அ)

## விவசாய அமைச்சில் இருந்து

# பேராசிரியர் புத்தி மாரம்பே அதிரடியாக பதவி நீக்கம்!





கொழும்பு, ஒக். 27

பேராதனை பல்கலைக்கழகத்தின் பயிர்ச்செய்கை விஞ்ஞானப் பிரிவின் பேராசிரியர் புத்தி மாரம்பே, விவசாய அமைச்சில் வகித்து வந்த அனைத்துப் பதவிகளில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளார்.

அமைச்சின் செயலாளர் சிரேஷ்ட பேராசிரியர் உதித் ஜயசிங்கவுக்கு அமைச்சர் மஹிந்தானந்த அளுகமகேயினால் இந்த பணிப்புரை விடுக்கப்பட்டதாக விவசாயத்துறை அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

தேசிய விவசாயக் கொள்கை, இலங்கை விவசாயத்துறை நவீனமயமாக்கல் திட்டம் மற்றும் சிறுதொழில் வியாபார கூட்டுத் திட்டம் ஆகியவற்றை உருவாக்குவதற்கான நிபுணர் குழுவிலிருந்தும் அவர் நீக்கப்பட்டுள்ளார்.

கிளைபோசைட் இறக்குமதியை இடைநிறுத்துவதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானத்துக்கு எதிராக பல்வேறு பிரசாரங்களை முன்னெடுத்தமைக்காக அவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கைகளை விமர்சித்தார் என பேராசிரியர் புத்தி மரம்பே மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் புத்தி மாரம்பே அரசாங்கத்தின் விவசாயக் கொள்கைகளுக்கு எதிராக சர்ச்சைக்குரிய அறிக்கைகளை வெளியிட்டமை காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

# மஹிந்தானந்தவை எச்சரிக்கும் வெலிமடை பிரதேச விவசாயிகள்



கொழும்பு, ஒக். 27

விவசாயம் குறித்து தெரியாத அமைச்சர் கூச்சலிட்டுக்கொண்டு இருந்துவிட்டு வாக்கு கேட்கவந்தால் அவர்களுக்கு மண்வெட்டி காத்திருக்கிறது என்று வெலிமடை பிரதேச விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இரசாயன உரத்தை தடைசெய்து இயற்கை உரத்தின் மூலம் விவசாயம் செய்யவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ள நிலையில், விவசாயிகள் இரசாயன உரம்வேண்டும் என்று தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தினந்தோறும் நாடளாவிய ரீதியில் விவசாயிகள் ஆங்காங்கே போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில், பதுளை - வெலிமடை விவசாயிகள் நேற்று முன்தினம் நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது, மண்வெட்டி இனி வயல் வெட்டுவதற்கல்ல, வாக்கு கேட்டுவரும் அரசியல்வாதிகளுக்கும் காத்திருக்கிறது என்று தெரிவித்தனர்.

“விவசாய அமைச்சருக்கு இதுவரை கௌரவமாகவே பேசியுள்ளோம். இந்த மண்வெட்டியை நாம் வயல் வெட்டுவதற்கே பயன்படுத்தினோம். எனினும், எமது பொறுமைக்கும் எல்லை உண்டு. தற்போது பெரும்போகம் ஆரம்பித்துள்ளது. ஆனால் விவசாயத்தை முன்னெடுக்க வழியில்லை. விவசாய அமைச்சர் தெரியாத விடயங்கள் குறித்து பேசிக் கொண்டிருக்கிறார். விவசாய அமைச்சர் செய்ய முடியும் என்று கூறுவதை இங்கு வந்து களத்தில் செய்து காட்டுமாறு கூறுகிறோம். அப்படி செய்தால் விவசாய அமைச்சர் சொல்வதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். இரசாயன உரம் இன்றி விவசாயம் செய்ய முடியும் என்பதை நிரூபித்தால் நாங்கள் இங்கிருந்து பொரலந்த நகர் வரை தவழ்ந்து செல்வோம். அப்படியில்லாமல் தெரியாத விடயங்களைப் பேசிக் கொண்டிருந்தால், நாம் இந்த மண்வெட்டியை இனி மேல் வயல் வெட்ட பயன்படுத்தமாட்டோம். மீண்டும் வாக்கு கேட்டு வரும்போது, உங்களை வெட்டவே பயன்படுத்த நேரிடும்.” என்று வெலிமடை விவசாயிகள் ஆக்ரோசமாக தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர். (அ)

■ ஹர்ஷன ரம்புக்வெல்ல



# தர்க்க ரீதியான சிந்தனையும் பல்கலைக்கழக கல்வியின் 'மதிப்பும்'

தர்க்க ரீதியான சிந்தனை என்ற பதத்தைப் பொது மற்றும் உயர் கல்வியில் தற்போது பரவலாகக் காணலாம். கல்வி தொடர்பான கொள்கை அறிக்கைகளில் அதன் பயன்பாடு அதிகம். கல்விச் சீர்திருத்தம் பற்றிப் பேசுவோர் பலர் இதனை ஒரு முக்கிய ஆற்றலாகக் கருதுகின்றார்கள். வினைத்திறன் மிக்க தொழிலாளர்களை உருவாக்குவதற்கான ஒரு கருவியாகக் கல்வியை நோக்குவோரும் இதனை ஒரு சாதகமான விடயமாக ஏற்றுக்கொள்கிறார்கள்.

இருப்பினும் தர்க்க ரீதியான சிந்தனை என்றால் என்ன என்பதற்கான தெளிவு சொற்ப அளவே காணப்படுகின்றது. பலர் இதனை பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான அல்லது நியாயமான தீர்வுகளை மேற்கொள்ளத் தேவையான ஆற்றலாகப் பார்வையிடுகின்றனர். அதாவது ப்ளூாமின் வகைபிரிப்பில் (Bloom's Taxonomy) ஒரு உயர் ஆற்றலாக இதனைக் கருதுகிறார்கள். தர்க்க ரீதியான சிந்தனை தொடர்பாக ஏகப்பட்ட அறிவார்ந்த எழுத்தாக்கங்கள் உள்ளன. இவை "தொழிற்துறையில்" தர்க்க ரீதியான சிந்தனையாளர்களின் தேவை பற்றியும், பல்கலைக்கழகங்கள் எவ்வாறு இத்தகைய சிந்தனையாளர்களை உருவாக்கத் தவறுகின்றன என்பது பற்றியும் விவரிக்கின்றன.

> **இலங்கையில் உயர் கல்வியானது வெகு விரைவாகச் சந்தைபடுத்தலுக்குட்பட்டுவருகின்றது. அரச கொள்கைகள் வேலைக்கமர்த்தக்கூடிய பட்டதாரிகளை உருவாக்குவதிலும், இலாபமீட்டக்கூடிய பட்டப்படிப்புக்களைத் தாபிப்பதிலும் தமது கவனத்தைத் திருப்பியுள்ளன.**

தர்க்க ரீதியான போக்கு என்பதற்கான அர்த்தங்கள் பல. "தர்க்க ரீதியான" என்ற அடைமொழியிலிருந்து "உய்யுமை" எனும் பெயர்ச் சொல்லுக்குச் செல்வோமானால் இங்கு அவற்றைப் புரிந்துகொள்வது சற்றே கடினமாகின்றது. அகராதி வரையறைப்படி உய்யுமை என்பது இராசயனம் போன்ற சடப்பொருட்கள் நிலையற்ற தன்மையை அடையும் புள்ளியாகும். மேலும் சுற்றியுள்ள உலகில் நடைபெறுபவற்றை அவதானித்து கேள்விகள் தொடுக்கும் தன்மையைக் கொண்ட வாழ்க்கை முறை எனவும் அது வரையறுக்கப்படுகின்றது. சற்றுத் தெளிவு குன்றிய இந்த வரைவிலக்கணமே எனது கவனத்தை ஈர்க்கின்றது. தர்க்க ரீதியான சிந்தனை எனும் கோட்பாடானது நீண்ட, சிக்கலான, தீவிரமான ஓர் அறிவுசார் வரலாற்றைக் கொண்டது.

எனினும் முக்கியக் கல்விக் கலந்துரையாடல்களில் இது எளிமையாக்கப்பட்டு ஒரு கட்டுக்கோப்பிற்குள் கொண்டுவரப்படுகின்றது. "தர்க்க ரீதியான சிந்தனை" பற்றிப் போதிக்கும் கல்வியாளர்கள் பலரின் நடத்தைகள் நடைமுறையில் அதற்கு எதிர்மறையாகவிருப்பது வியப்புக்குரியது. உதாரணமாகக் கருத்தாடல் மன்றங்கள் பலவற்றிலும் அதிகரித்து வரும் மாணவர் பழு பற்றியும் அதனைக் கையாளக்கூடிய மனித மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் பற்றாக்குறை பற்றியும் பேசப்படுகின்றன. இங்கு பெரும்பாலும் புதிய கற்பித்தல் முறைகள் மற்றும் மாற்று மதிப்பீட்டு முறைகள் மூலம் இப்பற்றாக்குறையைச் சரி செய்வது தொடர்பாகவே கலந்துரையாடப்படுகின்றது. எமது பீடம் சார் மன்றங்களோ செனட் சபைகளோ இந்தப் பிரச்னைக்கான அடுத்த கட்டக் கேள்விகளைத் தொடுக்க மறுக்கின்றன.

மாணவர் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவது ஏன்? உயர் கல்வியில் அரச முதலீடு குறைந்து வருவதற்கான காரணம் என்ன? கல்வி நிறுவனங்கள் மாணவ வெளிப்பாடுகளின் அடிப்படையில் மதிப்பிடப்படுவது ஏன்? எமது கல்வி முறையின் தன்மை மற்றும் அதன் குறிக்கோள் பற்றி எழுப்ப வேண்டிய பல அடிப்படைக் கேள்விகள் உள்ளன. இருப்பினும் இவ்வாறான கேள்விகள் "அரசியல்" சார்ந்தவை அல்லது நடைமுறைக்கு ஏற்பற்றவை எனக் கருதப்படுவதோடு கல்வியாளர்களும் அவர்களது பங்களிப்புகள் கருத்தியல் ரீதியாக இல்லாது நடைமுறைச் சாத்தியமாக இருக்க வேண்டும் எனக் கருதுகிறார்கள்.

தர்க்க ரீதியான சிந்தனை என்பதை வகுப்பறைகள் மற்றும் பாடத்திட்டங்களுக்குள் உள்ளடக்கும் போது அதன் அரசியல் மற்றும் கருத்தியல் அம்சங்கள் விலக்கப்படுகின்றன. பிரதான கல்வியைப் பொறுத்தவரையில் தர்க்க ரீதியான சிந்தனை என்பது பெரிதும் நவ தாராளவாதத்தினால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இங்கு மாணவர்கள் தமது உணர்வுகள் தொடர்பாக சுய மதிப்பீடு செய்யக் கற்பிக்கப்படுகிறார்கள். இதன் விளைவாக மாணவர்கள் மத்தியில் எல்லாவற்றுக்கும் இணங்கிக் கொடுக்கும் மனப்பான்மையும் தமது "வினைத்திறன்" அற்ற தன்மை பற்றிய குற்ற உணர்வுமே உண்டாக்கப்படுகின்றன. உதாரணமாக ஆசிரியர்களுக்கான கல்வியில் "பிரதிபலிப்புச் சிந்தனையை" நோக்குவோம்.

இதனடிப்படையில் ஒரு ஆசிரியர் தொடர்ந்து தான் எவ்வாறு மேலும் சிறந்த ஒரு ஆசிரியராகத் தொழிற்பட முடியும் என்பதில் கவனம் செலுத்துகின்றார். எனது கற்பித்தல் முறைகள் பொருத்தமானவையா? அவை மாணவர் - மையமாக உள்ளனவா? எனது கற்பித்தல் திட்டங்கள் பயனுள்ளவையா? இவ்வாறான ஒரு சிந்தனைப் போக்கில் அரசியலும் கருத்தியலும் புறக்கணிக்கப்பட்டுவிடுகின்றன.

எமது மாணவர்கள், பயிற்சி ஆசிரியர்கள் அல்லது விரிவுரையாளர்களை எமது கல்வித்திட்டத்தின் சமத்துவமற்ற தன்மை, அதன் வர்க்க ரீதியான பாகுபாடுகள் பற்றிச் சிந்திக்கத் தூண்டுவது அரிதாகும். எமது பாடத்திட்டங்களில் பால், இனம், வர்க்கம் ரீதியாக உள்ள பாகுபாடுகளைப் பற்றி நாம் வெளிப்படையாகப் பேசுவதில்லை. உய்யுமை என்பதை ஒரு ஆற்றலாக உருவகித்திருப்பது எமது கல்வியில் தர்க்க ரீதியான சிந்தனைக்கு இடமளிக்கப்படுகின்றது என்ற ஒரு பொய்யான தோற்றத்தை உருவாக்கியுள்ளது.

உய்மை என்பதை ஒரு பொருளாகக் கொள்ளும் இக்கருத்துக்கு மாறாக "தர்க்கம்" என்பதன் ஆழமான அர்த்தங்கள் உலகின் தெளிவற்ற ஓரங்களில் காணப்படுகின்றன. மேற்கத்திய தத்துவஞானத்தின் படி தர்க்கம் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை எதிர்க் கேள்வி கேட்கும் சோக்ரடீஸின் சிந்தனைகளில் ஆரம்பித்து இராஸ்மஸ், தாமஸ் முவர், பேகன், டெஸ்கார்டெஸ், ரஸல், ஜான் டூவி ஆகிய சிந்தனையாளர்கள் வரை விரிவடைந்துள்ளது. இவர்களது தத்துவஞானங்கள் பரந்துபட்டவையாக இருப்பினும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களைக் கேள்வி கேட்கும் பாங்கு இங்கு பொதுவான ஒன்றாக உள்ளது. அதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட வழமைகளைப் நிராகரித்தார்கள் எனக் கூற முடியாது. மாறாக அவற்றைக் கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்ளாது கேள்விகள் ஊடாகத் தர்க்க ரீதியாக அவற்றைப் புரிந்து கொள்ள முற்பட்டார்கள் என இங்கு கருதலாம்.

தற்போது "மதிப்பு" என்ற விடயத்தை நோக்குவோம். இன்றைய புதிய "பெரு நிறுவனம்" போன்ற பல்கலைக்கழக அமைப்பானது தத்துவஞானிகளாலன்றிக் கணக்காளர்களால் கையாளப்படுகின்றது என்பதை 1997 இல் பில் ரீடிங்ஸ் அவரது "பல்கலைக்கழகங்கள் சிதைவில்" எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இது தர்க்க ரீதியான சிந்தனை தொடர்பாக தற்போது இருக்கும் பிரச்சினையை எடுத்துக்காட்டுகின்றது. தர்க்க ரீதியான சிந்தனையானது பிரதான கலந்துரையாடல்களால் வடிவமைக்கப்பட்டு அதன் தத்துவஞானம் ரீதியான போக்கை இழந்துள்ளது. அதாவது அதன் மதிப்பு போட்டி நிறைந்த உலகில் வேலையை உறுதிப்படுத்தத் தேவையான ஒரு சாதகமான ஆற்றல் என்ற ரீதியில் அதன் மதிப்பு முடிவடைகின்றது. உயர் கல்வியின் நவ தாராளவாதம் நோக்கிய மாற்றத்தை ரீடிங்ஸினது நூல் எடுத்தியம்புகின்றது.

இவர் இங்கு குறிப்பிடும்1990 களின் சம்பவங்கள் ஐரோப்பிய-அமெரிக்க பிராந்தியங்களில் இடம்பெற ஆரம்பித்த மாற்றங்களாகும். இங்கு அவர் "சிதைவுகள்" எனக் குறிப்பிட்டது தர்க்க மற்றும் தத்துவ ரீதியான சிந்தனைக்கான இடமாகிய பாரம்பரிய பல்கலைக்கழகங்களாகும். இலங்கையில் இன்று நாம் காண்பது இதன் தீவிரமான ஒரு பிரதிபலிப்பு எனக் கூறலாம்.

இலங்கையில் உயர் கல்வியானது வெகு விரைவாகச் சந்தைபடுத்தலுக்குட்பட்டுவருகின்றது. அரச கொள்கைகள் வேலைக்கமர்த்தக்கூடிய பட்டதாரிகளை உருவாக்குவதிலும், இலாபமீட்டக்கூடிய பட்டப் படிப்புக்களைத் தாபிப்பதிலும் தமது கவனத்தைத் திருப்பியுள்ளன. இப்புதிய பல்கலைக்கழகங்களின் "மதிப்பானது" அது உருவாக்கும் பட்டதாரிகளின் எண்ணிக்கையிலும் அவர்களது வேலைக்கமர்த்தக் கூடிய தன்மையிலும் தங்கியுள்ளது. இங்கு நாம் பார்த்ததில் தர்க்க ரீதியான சிந்தனையானது பற்றாக் குறையான பதங்களால் வரையறுக்கப்பட்டுள்ளது. இங்கு நான் நடைமுறைச் சாத்தியமான ஒரு தீர்வை வழங்காவிட்டாலும் இது தொடர்பாகக் கலந்துரையாடல்களையும் வாதங்களையும் தூண்டுவதே எனது நோக்கமாகும்.

**எழுத்தாளர் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் ஆங்கில முதுகலைப் பட்டப்படிப்பு நிறுவனத்தின் இயக்குநரும் ஆங்கில விரிவுரையாளருமாவார்.**

மொழிபெயர்ப்பு:
**கோபிகா சிவகுமார்**



# பருவநிலை மாற்றம்; உலகளவில் பதற்றத்தை ஏற்படுத்தும்

## அமெரிக்க உளவுத்துறையின் எச்சரிக்கை

பருவநிலை மாற்றம் சர்வதேச பதற்றத்தை மேலும் அதிகரிக்கும் என அமெரிக்க உளவுத்துறை அமைப்பு எச்சரித்துள்ளது.

2040 ஆம் ஆண்டு வரை தேச பாதுகாப்பில் பருவநிலையின் தாக்கம் எவ்வாறு இருக்கும் என்பதை பருவநிலை பற்றின அமெரிக்க நாட்டின் உளவுத்துறை மதிப்பீடில் முதன்முறையாக ஆய்வு செய்தது.

இதனை எதிர்கொள்வது எப்படி என்று பல நாடுகள் விவாதிக்கும். அதன் விளைவுகள் பெரும்பாலும் இந்த மாற்றத்தை மிகவும் குறைந்த அளவில் மட்டுமே ஏற்கக்கூடிய ஏழை நாடுகளில் பிரதிபலிக்கும்.

மேலும், எதிர்கால புவி பொறியியல் தொழில்நுட்பத்தை செயல்படுத்த நினைக்கும் சில நாடுகள் தன்னிச்சையாக செயல்படுவதனால் ஏற்படும் ஆபத்தைப் பற்றியும் இந்த அறிக்கை எச்சரிக்கிறது.

மொத்தம் 18 அமெரிக்க உளவுத்துறை அமைப்புக்களின் 27 பக்க மதிப்பீடு ஒரு கூட்டுப்பார்வையாகும். இது தேசியப் பாதுகாப்பில் பருவநிலை எத்தகைய இடம் வகிக்கும் என்பது பற்றி என்பதன் முதல் சிந்தனையாகும்.

இந்த அறிக்கை உலகம் முழுவதும் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்க தவறியதால், மிகவும் ஆபத்தான போட்டிக்கும் உறுதியின்மைக்கும் தள்ளப்படும் நிலையை விவரிக்கிறது. சர்வதேச ஒப்பந்தத்தை எதிர்பார்த்து அடுத்த மாதம் கிளாஸ்கோவில் நடைபெறவுள்ள பருவநிலை உச்சி மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கலந்துகொள்ளவுள்ள நிலையில் இது வெளியிடப்பட்டது.

தங்கள் பொருளாதாரத்தை ஆதரிக்க முயலும் நோக்கில், நாடுகள் புதிய தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் வாய்ப்பை எதிர்நோக்கும் என்று எச்சரித்துள்ளது. 20க்கும் மேற்பட்ட நாடுகள் ஒட்டு மொத்த ஏற்றுமதி வருவாயில் 50 சதவீதத்திற்கும் அதிகமாக எரிபொருள்களை சார்ந்து உள்ள நிலையில், சில நாடுகள் இதைப் பற்றி நடவடிக்கை எடுக்கும் விருப்பத்தையும் தடுக்கும்.

மிக கடுமையான பருவநிலை பாதிப்புக்கு உள்ளாகும் என்று கருதப்படும் மத்திய கிழக்கு நாடுகள் எரிபொருள் வருவாயிலும் வீழ்ச்சி அடைந்தால், மேலும் பாதிப்பு அடையும் என்று இந்த அறிக்கை கூறுகிறது. வெகுவிரைவில், பருவநிலை மாற்றத்தின் தாக்கம் உலகம் முழுவதும் உணரப்படும் என்று எச்சரிக்கிறது.

**மிகவும் ஏழ்மையான நாடுகள்**

ஆற்றல், உணவு, நீர் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றில் 11 நாடுகள் மற்றும் இரண்டு பகுதிகள் குறிப்பிட்ட அளவில் ஆபத்தில் உள்ளன என்று அமெரிக்க உளவுத்துறை கண்டுபிடித்துள்ளது. அவை மேலும் ஏழ்மையடைந்து, மிகவும் குறைவாகவே ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையில், உறுதியின்மை மற்றும் உட்பூசல் ஏற்படும் ஆபத்தில் இருக்கும். மின்சார விநியோகம் போன்ற சேவைகள் வறட்சி மற்றும் வெப்ப அலை காரணமாக அழுத்தத்தை சந்திக்கலாம்.

இந்த 11 நாடுகளில் ஐந்து, தெற்கு மற்றும் கிழக்கு ஆசியாவில் உள்ளன. அவை ஆப்கானிஸ்தான், பர்மா, இந்தியா, பாகிஸ்தான், வட கொரியா வாகும். நான்கு நாடுகள் மத்திய அமெரிக்கா மற்றும் கரிபீயன் - கௌதமாலா, ஹெய்ட்டி, ஹொண்டுரஸ், நிகரகுவா ஆகியவை. மற்றவை கொலம்பியா மற்றும் ஈராக் ஆகும். மத்திய ஆபிரிக்கா மற்றும் பசுபிக்கில் உள்ள சிறிய மாநிலங்களும் அபாயத்தில் உள்ளது.

நிலையற்றதன்மை காரணமாக அகதிகள் அதிகம் உருவாகலாம், இது அமெரிக்காவின் தென் எல்லைக்கு அழுத்தம் கொடுக்கும் என்ற எச்சரிக்கையும் கூறப்படுகிறது. இது புதிய மனிதநேயச் சிக்கல்களை உருவாக்கும்.

**மோதலுக்கான இடங்கள்**

ஆட்டிக் பகுதி இதில் அடங்கும். அங்கு பனிக்கட்டி குறைந்து வருவதனால், அதனை அணுகத்தக்க நிலை அதிகரிக்கும். இது புதிய கப்பல் போக்குவரத்து பாதைகளுக்கு வழிவகுக்கும். மீன் வளத்திற்கு அணுகக்கூடியதாகும். ஆனால், இராணுவத்தினர் அங்கு செல்லும் போது, தவறான மதிப்பீடு உருவாகும் ஆபத்தும் உள்ளது.

நீருக்கான அணுகுதலும் சிக்கல்களுக்கான அடிப்படையாக உருவாகும். மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்காவில், கிட்டதட்ட 60 சதவீதம் மேற்பரப்பு நீரின் வளங்கள் எல்லைகளைத் தாண்டி செல்கின்றது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நீண்ட காலமாக நீர் பிரச்னை உள்ளது. இந்நிலையில், சீனா, கம்போடியா மற்றும் வியட்நாமிக்கு இடையே மேகோங் ஆறு பேசின் காரணமாக பிரச்னை ஏற்படலாம் என்று அறிக்கை எச்சரிக்கிறது.

**எதிர்கால தொழில்நுட்பம்**

பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள ஒரு நாடு புவி பொறியியலை பயன்படுத்த முடிவு செய்யலாம் என்று மற்றொரு வகையான ஆபத்தும் உள்ளது.

இது எதிர்கால தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதும் அடங்கும். உதாரணமாக, மேல் வளி மண்டலத்தில் பிரதிபலிக்கும் துகள்களை அனுப்பதல். இது எரிமலை வெடிப்பின் குளிர்ச்சியடையும் விளைவுகளை நகலாகும். அல்லது குறிப்பிட்ட பகுதியில் குளிர்ந்த பெருங்கடலில் ஏரோசோலை பயன்படுத்துவதற்கு சமம்.

ஆனால், ஒரு நாடு மட்டுமே நடவடிக்கை எடுத்தால், அப்பிரச்னையை மற்றொரு பகுதிக்கு அது நகர்த்தும். இது பிற நாடுகளில் எதிர்மறையான வகையில் கோபத்தை உருவாக்கும் அல்லது அந்நாட்டிற்கு நடவடிக்கை எடுக்கமுடியாமல் போகும்.

அவுஸ்திரேலியா, சீனா, இந்தியா, ரஷ்யா, பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகிய பல்வேறு நாடுகளில் உள்ள ஆராய்ச்சியாளர்களும், பல்வேறு ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர்களும் இந்த தொழில் முறைகளை ஆராய்ந்து வருகின்றனர். ஆனால், மிகவும் குறைவான விதிமுறைகளும் வரையறைகளுமே உள்ளன.

**ஒத்துழைப்புக்கான விளிம்புநிலை**

இந்த இருண்ட எதிர்காலத்தை தவிர்க்க சில வழிகள் உள்ளன என்று இந்த அறிக்கை கூறுகிறது. புவி பொறியியலின் அனுமதிக்கக்கூடிய பயன்பாடு உட்பட தடையை தகர்க்கும் தொழில் நுட்பங்கள் இதில் சில. மற்றொன்று, பெரும் ஒத்துழைப்பை வலியுறுத்தக்கூடிய பருவநிலை பேரழிவு.

பாதுகாப்பு பற்றின சிந்தனையின் முக்கிய பகுதியாக தற்போது பருவநிலை இருக்கிறது என்பதன் குறியீடுதான் இந்த அறிக்கை. இது ஏற்கனவே இருக்கும் சிக்கல்களை அதிகரிக்கும் புதிய சிக்கல்களையும் உருவாக்கும்.

"எப்போதும் இல்லாத வகையில், தேசியப் பாதுகாப்பு நிலவரத்தை பருவநிலை மாற்றம் உருவாக்குகிறது என்று அரசுகள் மிகுதியாக அங்கீகரிக்கின்றன.", என்று தேசிய உளவுத்துறை பேரவையின் முன்னாள் ஊழியரும், பருவநிலை மற்றும் பாதுகாப்புக்கான மையத்தின் இயக்குநருமான ஐரின் சிகோர்ஸ்கே பி.பி.சி.யிடம் கூறுகிறார்.

"சீனாவுடனான போட்டி போன்ற மற்ற பாதுகாப்பு விஷயங்களில் இருந்து பருவநிலை முக்கியத்துவத்தை பிரிக்க முடியாது. கடற்கரையோர நகரங்களில் வாழும் இலட்சக்கணக்கான மக்களை பாதிக்கும் அதிகரித்து வரும் கடல் மட்டஅளவு முதல் ஆற்றல் துறை கட்டமைப்பை அச்சுறுத்தும் உட்பகுதிகளின் வெள்ளம் வரையிலும், உணவு பாதுகாப்பை வீழ்த்தும் புலம்பெயரும் மீன் வளமும், பாலைவனமாக்கப்படுதலும் என அந்த நாடு கூட்டு பருவநிலை ஆபாயத்தை எதிர்கொள்கிறது. இந்த காரணிகளை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளாத தேசிய பாதுகாப்பு திறனாய்வு, சீனாவின் நடத்தை குறித்த முக்கிய கேள்விகளுக்கான பதில் தவறாகவே கிடைக்கும்."

இந்த புதிய உளவுத்துறை மதிப்பீடு நம் முன்னால் இருக்கும் முக்கிய சிக்கல்களை எடுத்துரைத்துள்ளது. ஆனால், இந்த உளவுத்துறைகளிடம் இருந்து வரும் எச்சரிக்கை குறித்து அரசாளுபவர்கள் என்ன செய்வார்கள் என்பதே உண்மையான கேள்வியாக இருக்கும்.!

பி.பி.சி.

> "ஆற்றல், உணவு, நீர் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றில் 11 நாடுகள் மற்றும் இரண்டு பகுதிகள் குறிப்பிட்ட அளவில் ஆபத்தில் உள்ளன என்று அமெரிக்க உளவுத்துறை கண்டுப்பிடித்துள்ளது. அவை மேலும் ஏழ்மையடைந்து, மிகவும் குறைவாகவே ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில், உறுதியின்மை மற்றும் உட்பூசல் ஏற்படும் ஆபத்தில் இருக்கும்.



# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I
நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL


13. ஒரு கூண்டில் குரங்குகள் சிலவும் கிளிகள் சிலவும் இருந்தன. அவற்றின் தலைகளை எண்ணினால் 20 வருகிறது. கால்களை எண்ணினால் 48 வருகிறது. அப்படியானால் அங்குள்ள குரங்குகள் எத்தனை?
1) 6 2) 4 3) 8

14. நாய் ஒன்று கிணற்றுக்குள் விழுந்துவிட்டால் அதன் விளைவாக உடனடியாக நடந்திட வாய்ப்புள்ளது பின்வருவனவற்றுள் எது?
1) உடல் முழுவதும் நனைதல்
2) மரணம் சம்பவித்தல்
3) உரத்துக் குரைத்தல்

15. மிகப்பெரிய நான்கிலக்க எண்ணுடன் மிகச் சிறிய ஈரிலக்க எண்ணைக் கூட்டினால் பெறப்படும் எண் யாது?
1) 1 010 2) 10 009 3) 10 098

16. 
இவ்வுருவில் இனங்காணக் கூடிய முக்கோணிகள் எத்தனை?
1) 15
2) 13
3) 17

- 17 ஆம் 18 ஆம் வினாக்களிற்கு எண்கள் அமைந்துள்ள விதத்தைப் பார்த்து வினாக்குறி இடப்பட்டுள்ள இடத்திற்கு வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.


17. 


1) 20 2) 18 3) 19

18. 22 —20— 18 32 22 12 38 29 ?
1) 20 2) 30 3) 40

19. வகுப்பில் உள்ள மாணவர்களில் மேசை ஒன்றிற்கு 5 பேர் வீதம் அமர்ந்தால் 2 மேசைகள் மிகுதியாகும். மேசை ஒன்றிற்கு 4 மாணவர்கள் வீதம் அமர்ந்தால் 10 மாணவர்களுக்கு அமர்வதற்கு இடமில்லை எனில் அந்த அறையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையும் மேசைகளின் எண்ணிக்கையும் முறையே.
(1) 90 மாணவர்கள் 20 மேசைகள்.
(2) 40 மாணவர்கள் 10 மேசைகள்.
(3) 20 மாணவர்கள் 08 மேசைகள்.

- **20ஆம் 21ஆம் வினாக்களில் ஒளிபுகக்கூடிய தாளில் வரையப்பட்ட உருக்களை முறிகோட்டின் மடிக்கும் போது தோன்றும் உருவம் எது?**

20. 


21. 


22. கலைநிகழ்வொன்றில் பங்குபற்றிய பெண்களின் எண்ணிக்கை, ஆண்களின் எண்ணிக்கையைப் போல் இரு மடங்காகும். அந்நிகழ்வில் பங்குபற்றிய சிறுவர்களின் எண்ணிக்கை, பெண்களின் எண்ணிக்கையைப்போல் இருமடங்காகும். ஆகவே, அந்நிகழ்வில் அதிகமாகப் பங்குபற்றியோர்.
1. பெண்கள் 2. சிறுவர்கள் 3. ஆண்கள்


23. பாற்போத்தல் ஒன்றின் விலை ரூபாய் 30.00 ஆகும். வெற்றுப் போத்தலின் விலையை விட பாலின் விலை ரூபாய் 14.00 அதிகமாகும். ஆகவே, பாலின் விலை யாது?
1. ரூபாய் 14.00 2. ரூபாய் 8.00 3. ரூபாய் 22.00


24.

| |
|---|
| 1 8 8 8 8 1 |
| 1 8 9 9 8 1 |
| 1 1 0 8 1 1 |

இக்கட்டத்திலுள்ள மூன்று இலக்கங்களையும் தலைகீழாகப் பார்க்கும் போது ஒன்று வித்தியாசமாக இருக்கும் அது எது?
1) 1 8 8 8 8 1 2) 1 8 9 9 8 1
3) 1 1 0 8 1 1

25. ✱ = 1, ⊗ = 9, # = 0, ⊠ = 6 எனின் இந் நான்கு குறியீடுகளையும் பயன்படுத்தி ஆக்கக் கூடிய மிகக்குறைந்த பெறுமதியுள்ள எண்?
1) ✱ ⊗ ⊠ # 2) ✱ # ⊠ ⊗ 3) ⊗ ⊠ ✱ #

26. 

மேற்படி தகவல்களின் படி பின்வரும் பழக் கூடைகளில் அதிக பணம் கொடுத்து வாங்கியவர் யார்?

1) பூஜா 2) பாமா 3) மாலா

# அங்கொட லொக்காவின் சகா சுட்டு படுகொலை!

கொழும்பு, ஒக். 27

அங்கொட, முல்லேரியா பகுதியில் நேற்று அதிகாலை 34 வயதுடைய நபர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

பாதாளக் குழுத் தலைவர் அங்கொட லொக்காவின் சகா ஒருவராலேயே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த நபரும் பாதாளக் குழுவுடன் தொடர்புபட்டவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவரும் அங்கொட லொக்காவுக்கு நெருக்கமானவர் எனவும், வெளிநாட்டில் தலைமறைவாகியுள்ள ‘இத்தாலி சமிந்த’ என்பவருக்கும் நெருக்கமானவர் எனவும் தெரியவந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த நபரே வீட்டுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(இ)

# சஜித் அணிக்குள் வெடித்தது மோதல் இரண்டு எம்.பிக்கள் விரைவில் “பல்டி”

## தொகுதி அமைப்பாளர் பதவி இராஜிநாமா



**கொழும்பு, ஒக். 27**

**ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர், தொகுதி அமைப்பாளர் பதவியை இராஜிநாமா செய்துள்ளனர்.**

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே ஆகிய இருவருமே, கட்சியில் வகிக்கும் பதவிகள் மற்றும் தொகுதி அமைப்பாளர் பதவிகளில் இருந்து இவ்வாறு விலகியுள்ளனர்.

இது தொடர்பில் கட்சி செயலாளருக்குத் தெளிவுபடுத்தி அவர்கள் இருவரும் கடிதமும் அனுப்பிவைத்துள்ளனர்.

வரவு - செலவுத் திட்ட கூட்டத் தொடரின்போது இவ்விருவரும் அரசுடன் இணைவார்கள் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. (இ)

# யாசகர்கள் அதிகரிப்பது தேசிய பிரச்னை; தீர்ப்பதற்கு உரிய வேலைத்திட்டம் தேவை

## கோபா குழுக் கூட்டத்தில் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 27

சமூக சேவைகள் போன்ற பொது விடயங்கள் ஒரு அமைச்சின் கீழ் இருப்பதன் அவசியம் தொடர்பில் அரச கணக்குகள் பற்றிய (கோபா) குழுவில் அவதானம் செலுத்தப்பட்டது.

சமூக சேவைகள் திணைக்களத்தின் தற்போதைய நிலைமைகளை ஆராயும் நோக்கில் கோபா குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் இக்கூட்டம் இடம்பெற்றது.

அமைச்சுக்களின் விடயப் பரப்புகளை தயாரிக்கும் போது தரப்படுத்தல் காணப்படுவது அவசியம் என்று இங்கு கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் விசேட வைத்தியர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

அங்கவீன குழந்தைகளுக்காக சேவைகளை மேற்கொள்வதற்கு மாவட்ட ரீதியில் நிறுவனங்களை ஸ்தாபிப்பதன் தேவையையும் அவர் சுட்டிக்காட்டினார்.

போதைக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வளித்தல், அவர்களுக்குப் பயிற்சிகளை வழங்குதல் மற்றும் சமூகமயப்படுத்தல் செயல்பாடுகளை ஒரு நிறுவனத்தினால் ஒழுங்குபடுத்தும் தேவையையும் குழு சுட்டிக்காட்டியது.

நீண்ட காலமாக சமூக சேவைகள் திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடங்களை விரைவாகப் பூர்த்தி செய்ய வேண்டும் எனவும் குழுவின் தலைவர் வலியுறுத்தினார்.

சமூக சேவைகள் திணைக்களம், மாகாண சமூக சேவைகள் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து செயல்படுவது முக்கியமானது எனவும் குழு உறுப்பினர்கள் இங்கு தெரிவித்தனர்.

யாசகர்கள் அதிகரிப்பது ஒரு தேசிய பிரச்னை எனவும், அந்த பிரச்னையை தீர்ப்பதற்கு உரிய வேலைத்திட்டம் தேவை எனவும் குழுவின் கருத்தாக இருந்தது. அதனைத் தீர்ப்பதற்கான கூட்டு வேலைத்திட்டத்தின் அவசியம் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.



இது தொடர்பில் பல்கலைக்கழக மட்டத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அந்த ஆய்வுகளின் முடிவுகளை சமூக சேவைகள் திணைக்களத்துக்கு பெற்றுக்கொள்வது மிகவும் முக்கியமானது எனவும் குழுவின் கருத்தாக இருந்தது. சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்பட்டுவரும் 08 தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு சொந்தமான 22 ஹெக்ரெயர் காணிகளை அந்தத் திணைக்களத்துக்கு கையகப்படுத்தாமை குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

சமூகத்தில் உள்ள அனைத்து அங்கவீன நபர்கள் தொடர்பிலும் சரியாகக் கண்டறியக்கூடிய தேசிய தரவு அமைப்பொன்று இதுவரை இல்லாமை குறித்து குழு சமூக சேவைகள் திணைக்களத்திடம் தகவல் கோரியது. அவ்வாறு காணப்படாமை தேசிய கொள்கை வகுப்புக்கு பாரிய தடையொன்றாக இருப்பதாக குழு சுட்டிக்காட்டியது. 121 மில்லியன் ரூபா செலவு செய்து மட்டக்களப்பு தொழிற் பயிச்சி நிலையம் அமைக்கப்பட்டிருந்தாலும், அந்த கட்டடத்தை பயன்படுத்தாமை தொடர்பில் குழு விசேட கவனம் செலுத்தியது.

அந்த நிலையத்தின் நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிப்பதாக இங்கு கருத்துத் தெரிவித்த சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் சந்தன ரணவீர ஆராச்சி தெரிவித்தார்.

சமூக சேவைகள் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்காக முறையான வகையில் தன்னார்வ தொண்டர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் குழு பரிந்துரைத்தது.

இந்தக் குழுக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, பாராளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, நிரோஷன் பெரேரா, அஷோக் அபேசிங்க, சிவஞானம் சிறீதரன், வைத்தியர் உபுல் கலப்பத்தி, பி.வை.ஜி. ரத்னசேகர, வீரசுமன வீரசிங்க, பேராசிரியர் ரஞ்சித் பண்டார, கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கோவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் சுனேத்ரா குணவர்த்தன உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகளும் இந்தக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். (இ)

# ஐவரை காவுகொண்ட ராகலை தீ விபத்து: சந்தேகநபருக்கு நவ. 8 வரை மறியல் நீடிப்பு

ராகலை, ஒக். 27

ஐந்து உயிர்களைக் காவுகொண்ட ராகலை மத்திய பிரிவு தோட்ட கோர சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணை வலப்பனை மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் நீதிவான் நீதிமன்ற நீதிவான் டி.ஆர்.எஸ்.ஜினதாச முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதே அவர் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

ராகலை காரே சம்பவத்தில் உயிர் தப்பியிருந்த தங்கையா இரவீந்திரன் (வயது-27) என்பவரை ராகலைப் பொலிஸார் இம்மாதம் 12ஆம் திகதி கைது செய்திருந்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட தங்கையா இரவீந்திரனை அன்றைய மாலை வலப்பனை பிரதேச மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் ராகலைப் பொலிஸார் ஆஜர்படுத்தியிருந்தனர். இதையடுத்து இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேகநபர் தரப்பில் சட்டத்தரணிகள் எவரும் மன்றில் ஆஜராகவில்லை. ஆனால், சந்தேகநபர் தொடர்பாக ராகலை குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸ் அதிகாரி ஆஜராகிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேநேரத்தில் வழக்கை விசாரித்த நீதிவான் டி.ஆர்.எஸ். ஜினதாச சம்பவம் தொடர்பில் இரசாயனப் பரிசோதனை அறிக்கை, மரண விசாரணை அறிக்கை, பிரேத பரிசோதணை அறிக்கை உள்ளிட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் அடுத்த வழக்கில் சமர்ப்பிக்க பொலிஸாருக்குக் கால அவகாசம் வழங்கி உத்தரவிட்டார்.

அதேநேரத்தில் இந்த வழக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் 8ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாகவும், அதுவரை சந்தேகநபரைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நீதிவான் உத்தரவிட்டார். (இ)

## எரிபொருள் விநியோகம் தொடர்பான

# பிரச்னைகளை அறிவிப்பதற்கு விசேட தொலைபேசி இலக்கம்

கொழும்பு, ஒக். 27

எரிபொருள் விநியோகம் தொடர்பில் ஏதேனும் பிரச்னைகள் காணப்படின் அது குறித்து அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, 011 54 55 130 என்ற இலக்கத்துக்கு அழைப்பை மேற்கொண்டு தமது பிரச்னைகள் தொடர்பில் அறிவிக்க முடியும்.

அத்துடன், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இன்மை, பதுக்கி வைத்தல் என்பன தொடர்பிலும் தகவல்களை வழங்க முடியும் என்று இலங்கை கனிய எண்ணெய் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலையை அதிகரிக்கும் நோக்கில் கடந்த நாட்களில் எரிபொருள் தட்டுப்பாட்டைத் தோற்றுவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# நிருபமா விசாரணைக்கு அழைப்பு!

கொழும்பு, ஒக். 27

முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிருபமா ராஜபக்ஷ இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

பண்டோரா ஆவண சர்ச்சையில் அவரும் அவரது கணவரான தொழிலதிபர் திருக்குமார் நடேசனும் சிக்கியுள்ளனர்.

தொழிலதிபர் திருக்குமார் நடேசனிடம் இரண்டு முறை விசாரணை நடத்தப்பட்டிருந்தது. இந்தநிலையிலேயே நிருபமா ராஜபக்ஷவுக்கும் ஆணைக்குழு விசாரணைக்கான அழைப்பை விடுத்திருப்பதாக தெரியவருவதோடு விசாரணைத் திகதி குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை. (இ)



# காதலரை கைபிடித்தார் ஜப்பான் இளவரசி மகோ!

ரோக்கியோ, ஒக். 27

ஜப்பான் நாட்டு இளவரசி மகோ, பாரம்பரிய விழாக்கள் இல்லாமல் சாதாரண நபர் போன்று தனது காதலர் கெய் கொமுரோவை நேற்று காலை திருமணம் செய்து கொண்டார்.

இதற்கான ஆவணத்தை ஜப்பான் அரச குடும்ப அரண் மனை வெளியிட்டுள்ளது.

ஜப்பான் பேரரசர் நரு ஹிட்டோ. இவரின் மருமகள் மகோ. இவர் அரச குடும்பத் தைச் சாராத கெய் கொமுரோ என்பவரை காதலித்து வந்தார். அரச குடும்ப பெண்கள் சாதா ரண நபர்களை திருமணம் செய்யத் தடை உள்ளது. இத னால் கடந்த பல ஆண்டுகளா கவே இவர்களின் திருமணத் திற்கு தடை காணப்பட்டது.

இந்த நிலையில், இந்த இணை பாரம்பரிய முறையில் இல்லாமல், வழக்கமான கொண்டாட்டங்களைத் தவிர்த்து சாதாரணமானவர் களை போல் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தது. இதன்படி, அவர்கள் நேற்று திரு மண பந்தத்தில் இணைந்தனர்.

மகோ, காதலுக்காக அரச குடும்ப சொத்துக்களை விட் டுக்கொடுத்தார். இதற்காக, 13 கோடியே 70 இலட்சம் யென் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 24 கோடி ரூபாய் - சொத்துக் களை மகோ விட்டுக் கொடுத் தார்.

நேற்று திருமணம் நிறைவ டைந்ததும் மகோ, அரண் மனையிலிருந்து வெளியேறி னார். முன்னதாக அவர் தனது பெற்றோர் , இளவரசர் அகி ஷினோ, இளவரசி கிகோ மற்றும் தங்கை ககோ ஆகி யோரை ஆரத்தழுவி உணர்ச்சி பொங்க பிரியா விடை பெற் றார். அப்போது அவர் மிகவும் எளிமையாக ஆடை அணிந் திருந்தார். (ஐ)

# சூடானில் மக்கள் போராட்டம்; துப்பாக்கி சூட்டில் 10பேர் பலி!



கார்ட்டூம், ஒக். 27

சூடானில் இராணுவம் ஆட் சியை கைப்பற்றியதைத் தொடர்ந்து மக்கள் வீதிகளில் இறங்கி போராட்டங்களில் ஈடு பட்டுள்ளனர். இந்த நிலையில் போராடியவர்கள் மீது படை யினர் நடத்திய துப்பாக்கி சூட் டில் 10 பேருக்கும் மேற்பட்ட வர்கள் உயிரிழந்தனர். 200இற் கும் மேற்பட்டவர்கள் காயம டைந்தனர்.

இராணுவ சதிப்புரட்சியை எதிர்த்து தலைநகர் கார்ட்டூமி லும், நாடு முழுவதும் உள்ள வீதி களிலும் மக்கள் ஜனநாயக முழக் கங்களை எழுப்பி வருகின்றனர். அவர்கள் கைகளில் தேசிய கொடிகளை ஏந்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் சூடானில் ஆட்சி கவிழ்ப்பு இடம்பெற் றது. இதன் பின்னணியில் அந்த நாட்டின் தளபதி ஜெனரல் அப் துல் பத்தாஹ் புர்ஹான் இருக் கிறார் என்பது உறுதியானது.

இந்த நிலையில், திங்கட் கிழமை இரவு தொடக்கம் வீதிகளில் இறங்கி மக்கள் போராட்டங்களை நடத்துகின் றனர். இந்தநிலையில், படை யினர் மக்கள்மீது நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 10 பேருக் கும் மேற்பட்டவர்கள் கொல் லப்பட்டனர். 200இற்கும் மேற் பட்டவர்கள் காயமடைந்தனர். எனினும், மக்கள் போராட்டங் களை தொடர்ந்து வருகின்றனர்.

இதனிடையே, வீடுவீடாக சென்று உள்ளூர் போராட்டக் காரர்களை படையினர் கைது செய்தனர். இணையம், தொலை பேசி இணைப்புகள் அனைத் தும் முடக்கப்பட்டுள்ளன.

சூடான் இராணுவ ஆட்சி யின் கீழ் வந்ததையை தொடர்ந்து 70 கோடி டொலர்கள் உதவி களை அமெரிக்கா நிறுத்தி யுள்ளது. இதேசமயம், இந்த நெருக்கடி நிலை குறித்து ஆராய ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபை நேற்றிரவு கூடியது. (ஐ)

# ஆஸியின் காபன் உமிழ்வு 2050இல் நிகர பூச்சியமாகும்!

## பிரதமர் ஸ்கொட் மொறிசன் உறுதி



சிட்னி, ஒக். 27

2050ஆம் ஆண்டு காபன் உமிழ்வில் நிகர பூச்சிய அளவை எட்டுவதற்கு அவுஸ் திரேலியா உறுதியளித்துள்ளது. எனினும், புதைபடிவ எரிபொருள் துறை களை முடிவுக்கு கொண்டுவரும் திட்டம் இதில் அடங்காது என்று பிரதமர் ஸ்கொட் மொறிசன் கூறினார்.

நிலக்கரி, எரிவாயு ஏற்று மதியில் முன்னணியில் இருக் கும் நாடு அவுஸ்திரேலியாவா கும். இந்நிலையில், காபன் வெளியேற்றும் திட்டத்தை குறைத்து புதுப்பிக்கத்தக்க ஆற் றல்மிக்க சக்திகளை பயன் படுத்த அந்த நாடு உறுதியளித் துள்ளது. இதற்காக 2 ஆயிரம் கோடி டொலர்கள் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 4 இலட்சம் கோடி ரூபாய் முத லீடு செய்யப்படும் என்று பிரதமர் அறிவித்துள்ளார்.

அந்த நாட்டின் மூலோபாய நட்பு நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய இரண்டும் உமிழ்வை விரைவாகக் குறைக்க உறுதியளித்துள்ளன. 2035ஆம் ஆண்டு அனைத்து மின்சாரமும் புதுப்பிக்கத்தக சக்திவளமாக இருக்கும் என்று பிரிட்டன் உறுதியளித்துள்ளது. 2005ஆம் ஆண்டை விட 2030இல் காபன் வெளியேற்றத்தை அரைவாசி யாகக் குறைக்க அமெரிக்கா உறுதியளித்துள்ளது.

எனினும், 2050இற்குள் காபன் வெளியேற்றத்தை நிகர பூச்சியமாக மாற்றுவதற்கான திட்டம் குறித்து மேலதிக விவ ரங்களை ஸ்கொட் மொறிசன் வெளியிடாமை கடும் விமர் சனங்களை எழுப்பியுள்ளன.

காலநிலை மாற்றத்தின் மோசமான விளைவுகளை தடுக்க - உயரும் வெப்ப நிலையை 2050ஆம் ஆண்டுக் குள் 1.5 செல்சியஸால் கட்டுப் படுத்த உலக நாடுகள் உறுதி யளித்துள்ளன. இதற்கு 2030 இல் வெளியேற்றப்படும் காப னின் அளவை 45 வீதத்தால் குறைக்க வேண்டும். இது 2050 இல் நிகர பூச்சியத்தை எட்டும். 100இற்கும் மேற்பட்ட நாடுகள் காபன் அளவை குறைக்க உறுதியளித்துள்ளன.

நிகர பூச்சியம் என்பது பச்சை வீட்டு வாயுக்களின் அளவை கூட்டாமல் இருப் பதைக் குறிக்கும். (ஐ)

# 3 மாதத்தில் ரூ. 180,000 கோடி 'பேஸ்புக்' இலாபம் ஈட்டியது!

வாஷிங்டன், ஒக். 27


இரகசிய ஆய்வு தொடர் பாக பேஸ்புக்மீது கடும் விமர் சனங்கள் எழுந்தாலும்கூட செப் ரெம்பர் மாதத்தின் - மூன்றாம் காலாண்டில் 900 கோடி டொலர்களை - இலங்கை மதிப்பில் சுமார் ஒரு இலட் சத்து 80 ஆயிரம் கோடி ரூபாயை அந்த நிறுவனம் இலாபமாகப் பெற்றுள்ளது. இது கடந்த ஆண்டில் 780 கோடி டொலர்களாகக் காணப் பட்டது.

எனினும், அப்பிளின் ஐ. ஓ. எஸ். 14 இயக்க முறைமை புதிய தனியுரிமை புதுப்பித்தலால் பேஸ்புக் பாதிக்கப்பட்டது. பயனர்களுக்கு விளம்பரங்களை குறிவைப்பது அந்த நிறுவ னத்துக்கு கடினமானது.

இதேசமயம், அமெரிக்கா வுக்கு வெளியே வெறுப்பு பேச்சு, பாலியல் கடத்தலை ஊக்குவித்தல் என்ற விடயங் களை நிர்வகிக்க பேஸ்புக் தவறிவிட்டதாக வலுவான குற்றச்சாட்டுக்கள் எழுந்துள் ளன. அத்துடன், கசிந்த இரக சிய ஆவணங்களால் மோச மான அழுத்தத்தை எதிர்கொள் கிறபோதும் எதிர்பார்த்ததை விட சிறந்த இலாபத்தை பேஸ்புக் பதிவு செய்துள்ளது.

செப். 30 வரையான 12 மாதங்களில் அதன் மாதந்த பயனர் தளம் 6 வீதம் அதி கரித்து 291 கோடியாக அதி கரித்தது. இலாபம் இருந்த போதிலும் அதன் வருமானம் அப்பிளின் தனியுரிமை விதி களால் எதிர்பார்ப்புகளை சற்று குறைத்தது என்று கூறப்படு கின்றது. (ஐ)





# உலகில் அமைதியை நிலைநிறுத்துவோம்! சீன தலைவர் உறுதி

பீஜிங், ஒக். 27

உலக அமைதி மற்றும் சர்வ தேச விதிகளை எப் போதும் நிலைநிறுத்துவோம் என்று சீன தலைவர் ஜி ஜின்பிங் தெரிவித் துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் சீனா இணைந்து 50ஆவது ஆண்டு நிறைவடைந்தது. இது தொடர்பான நிகழ்வில் சீன தலைவர் ஜி ஜின்பிங் கூறும் போது, "உலக அமைதி மற்றும் சர்வதேச விதிகளை எப்போதும் சீனா நிலைநிறுத்தும். சீனா அனைத்து வகையான மேலா திக்கம் மற்றும் அதிகார அரசி யல், ஒருதலைப்பட்சத்தை எதிர் கிறது" என்று தெரிவித்தார்.

மேலும், அமைதி, மேம் பாடு, நீதி, ஜனநாயகம், சுதந்தி ரம் ஆகிய மதிப்புகளை ஊக்கு விக்குமாறு அனைத்து நாடு களையும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஐ)

# புதிய தலாய் லாமா தெரிய சீனாவுக்கு அதிகாரம் இல்லை!

புதுடில்லி, ஒக். 27

அடுத்த தலாய் லாமாவை தெரிவு செய்வதில் சீனாவுக்கு எந்த அதிகாரமும் இல்லை. குறிப்பாக, சீன அரசாங்கத்துக்கு மதத்தில் நம்பிக்கை இல்லை என்பதாலும், திபெத்திய மக்களின் ஆன்மீக விவ காரம் என்பதாலும் இந்த நிலைமை என அருணா சலப் பிரதேசத்தில் உள்ள தவாங் மடத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

சீனாவுடனான இந்தியாவின் எல்லைக்கு அருகில் உள்ள சுமார் 350 ஆண்டுகள் பழமை யான மடத்தின் மடாதிபதியான கியாங்பங் ரின்பேச் குறிப்பிடுகையில்,

பீஜிங்கின் விரிவாக்கல் கொள்கையை எதிர் கொள்வது முக்கியம் என்றும், டில்லி தனது எல்லையில் உண்மையான கட்டுப்பாட்டுக் கோடு மீது கடுமையான விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தினரும் தொழில்சங்க போராட்டத்துக்கு தயார்

## அரசின் தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து

**கொழும்பு, ஒக். 27**

**ரயில் பருவகால அட்டை (சீசன்) உள்ளவர்கள் மாத்திரம் ரயில் சேவையைப் பயன்படுத்த முடியும் என்ற அரசின் தீர்மானம் பருவ கால அட்டை இல்லாதவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவித்துள்ள ரயில் நிலைய அதிபர் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன, இப்பிரச்னைக்கு ரயில் திணைக்களம் உரிய தீர்வை முன்வைக்காவிட்டால் பயணிகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் தொழில்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவோம் எனவும் எச்சரித்துள்ளார்.**



குருநாகலில் உள்ள ரயில் நிலைய அதிபர் சங்க காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கொரோனா வைரஸ் தாக்கம் குறைவடைந்ததைத் தொடர்ந்து பயணிகள் ரயில் சேவை மாகாண எல்லைக்குள் மாத்திரம் வரையறுத்ததாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பயணிகள் ரயில் போக்குவரத்துச் சேவையின்போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் வகுக்கப்படவில்லை.

ரயில் பருவகால அட்டை உள்ளவர்களுக்கு மாத்திரம் ரயில் சேவையைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் பருவகால அட்டையில்லாதவர்கள் அத்தியாவசிய சேவையில் ஈடுபடும்போது பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

ஆசன ஒதுக்கல் முறைமை ஊடாகப் பயணிகள் ரயில் போக்குவரத்துச் சேவையை ஆரம்பிக்குமாறு ரயில் திணைக்களத்துக்குப் பலமுறை ஆலோசனை வழங்கியுள்ளோம்.

பருவகால அட்டை உள்ளவர்கள் மாத்திரம் ரயில் சேவையைப் பயன்படுத்துவதால் ரயில் திணைக்களம் இலாபமடைந்துவிடாது. இதனால் ஏற்கனவே நட்டத்தில் இயங்கும் ரயில் திணைக்களம் மேலும் நட்டமடைய நேரிடும்.

அனைத்துப் பயணிகளும் ரயில் சேவையைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். அதற்கான சிறந்த திட்டங்களை ரயில் திணைக்களம் செயல்படுத்த வேண்டும். இல்லாவிடின் பயணிகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவோம்" - என்றார். (இ)

# மேலும் 29 பேர் கைது!

கொழும்பு, ஒக். 27

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் நேற்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 29 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக, தனிமைப்படுத்தல் உத்தரவை மீறியமை தொடர்பில் இதுவரை கைது செய்யப்பட்டோரின் எண்ணிக்கை 81 ஆயிரத்து 353 ஆக உயர்வடைந்துள்ளது.

அதேவேளை, குறித்த 24 மணிநேரத்தில் மேல்மாகாண எல்லையைக் கடக்க முற்பட்ட 542 வாகனங்கள் 1,088 பேருடன் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், மேல் மாகாணத்தினுள் உள்நுழைய முற்பட்ட 684 வாகனங்கள் 1,156 பேருடன் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (இ)

# சகல கிறிஸ்தவ எம்.பிக்களையும் பேச்சுக்கு அழைத்தார் கர்தினால்

கொழும்பு, ஒக். 27

கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து கிறிஸ்தவ உறுப்பினர்களையும் சந்திப்பதற்காக அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தச் சந்திப்பு எதிர்வரும்



வெள்ளிக்கிழமை பேராயர் இல்லத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணை மற்றும் பல விடயங்கள் தொடர்பில் இதன்போது பேசப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ)

# இரு மரண வீடுகளில் கொரோனா தொற்று

பதுளை, ஒக். 27

பதுளை, ஹல்துமுல்லை அம்பகம பிரதேசத்தில் இடம்பெற்ற இரு மரணவீடுகளில், இருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால், மரணவீட்டில் பங்கேற்ற அனைவரும் அன்ரிஜென் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஹல்துமுல்லை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அசங்க சம்பத் இதனைத் தெரிவித்துள்ளார்.

மரணவீடு இடம்பெற்ற பகுதியில் பாடசாலை ஒன்றும் உள்ளதால், சுகாதார நிலைமையைக் கருத்தில்கொண்டு மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்புவதைப் பெற்றோர் தவிர்த்துள்ளனர்.

குறித்த பாடசாலையில் 74 மாணவர்கள் கல்வி கற்று வருவதுடன் ஏழு ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். பாடசாலையில் கிருமித் தொற்று நீக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மேலும் கூறியுள்ளார். (இ)

# காணாமல்போன இலங்கை மீனவர் 4 வாரங்களின் பின் உயிருடன் மீட்பு

கொழும்பு, ஒக். 27

சர்வதேச கடற்பரப்பில் காணாமல்போயிருந்த இலங்கை மீனவர்கள் 4 பேர் இந்தியக் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இருந்து சுமார் 600 கிலோமீற்றர் தொலைவில் இந்திய கடற்படையினரால் மீட்கப்பட்ட, குறித்த நான்கு மீனவர்களும் அந்தமான் தீவுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

கடந்த செப்ரெம்பர் 26 ஆம் திகதி வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து ஏழு நாட்கள் கடலில் மீன்பிடிக்கும் ஏற்பாடுகளுடன் குறித்த நான்கு மீனவர்களும் கடலுக்குச் சென்றிருந்தனர்.

எனினும், திட்டமிட்டபடி குறித்த நாட்களுக்குள் மீனவர்கள் கரை திரும்பாத நிலையில், சம்பந்தப்பட்ட உறவினர்களால் மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் ஊடாக கடற்றொழில் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

இவ்விடயத்தில் கவனம் செலுத்திய கடற்றொழில் அமைச்சர், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்குப் பணித்ததுடன், இலங்கை மற்றும் இந்திய கடற் பாதுகாப்புத் தரப்பினருக்கும் தகவலைத் தெரியப்படுத்தி ஒத்துழைப்பைக் கோரியிருந்த நிலையில், தற்போது நான்கு கடற்றொழிலாளர்களும் மீட்கப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.(இ)

# தோல்வியடைந்த அரசு வீடு செல்வதே உத்தமம்!

## ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 27

"அரசு தோல்வியடைந்ததை அரசில் அங்கம் வகிக்கும் பிரதிநிதிகளே கூறத் தொடங்கியுள்ளனர். தற்போதைய நிலையில் அரசுக்குள் நெருக்கடி அதிகரித்துள்ளது. எனவே, இந்த அரசை உடனடியாக வீட்டுக்கு அனுப்ப வேண்டும். இல்லையேல் நாட்டுக்குத்தான் பேரழிவு."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"அமைச்சர்களான விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் ஊடங்களின் வெளியாகியிருந்ததை நாம் அவதானித்தோம்.

அதுமட்டுமன்றி ஆளுங் கட்சியில் அங்கம் வகிக்கும் 11 கூட்டணி கட்சிகள், அரசின் செயல்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றன.



விசேடமாக அரசில் அங்கம் வகிக்கும் சுசில் பிரேமஜயந்த கடுமையான விமர்சனம் ஒன்றை அரசுக்கு எதிராக முன்வைத்தார். இந்த அரசு தோல்வியடைந்து விட்டது என அவர் கூறினார்.

அரசு எடுத்த அனைத்துத் தீர்மானங்களும் தோல்வியடைந்துவிட்டன என்று அவர் கடுமையான விமர்சனத்தை முன்வைத்தார்.

அரசின் தீர்மானங்கள் தோல்வியடைந்துள்ளதை, அரசில் அங்கம் வகிப்பவர்களே புரிந்துகொள்ளத் தொடங்கிவிட்டனர்.

நாடு மிகவும் மோசமான நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது. மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதில் அரசில் அங்கம் வகிப்பவர்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளமை தெளிவாகியுள்ளது.

இந்த அரசை உடனடியாக வீட்டுக்கு அனுப்ப வேண்டும். இல்லையேல் நாட்டுக்குத்தான் பேரழிவு" - என்றார். (இ)

# பண முதலைகளால் எமது கடல் வளம் அழிப்பு!

## முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 27

"வடக்கில் கடலையே நம்பி பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றார்கள். ஆனால், வடக்கில் பல பண முதலைகள் அந்தக் கடல் வளத்தையே அழிக்கப் பார்க்கிறார்கள்."

- இவ்வாறு முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் குற்றஞ்சாட்டினார்.

நேற்று குருநகரில் முன்னெடுக்கப்பட்ட மீனவர்களின் எதிர்ப்புப் போராட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"வடக்கில் ட்றோலர் தொழில் செய்வோர் பலர் அரச உத்தியோகத்தர்களாகவும், வேறு தொழில் முயற்சியிலும் ஈடுபடுபவர்களே. தொடர்ச்சியாக




கடல் தொழிலில் ஈடுபடும் ஒரு சிலரே ட்றோலர் வைத்துள்ளார்கள். அவர்கள் தங்கள் குடும்பத்தைப் போலவே கடலையும் நேசிப்பவர்கள். ஆனால், கடலைக் கொள்ளையடிக்க முதலீடு செய்தவர்கள் எந்த எல்லைக்கும் போவார்கள். அவர்களை கண்டு நாங்கள் பயப்படபோவதும் இல்லை.

ஒரு சிலர் வாழ்வதற்காக எங்கள் மண் வளத்தையும் கடல் வளத்தையும் அழிப்பதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

உருவப்பொம்மை என்ன எங்களை சுட்டுப்போட்டாலும் எங்கள் வளங்களை அழிப்பவர்களுக்கு எதிராகப் போராடுவோம்.

குடத்தனையில் மணல் கொள்ளைக்கு எதிராகப் போராடிய நண்பன் தேதீஸை சுட்டுக் கொன்றதை நாம் மறக்கவும் இல்லை. அதற்குப் பயந்து மணல் கொள்ளையைத் தடுத்து நிறுத்தாமல் பயந்து ஒதுங்கவும் இல்லை. ஆகவே, எங்கள் போராட்டம் தொடரும்" - என்றார். (இ - 03)

## மன்னாரில் விளையாட்டு மைதானம் புனரமைக்கும் நடவடிக்கை ஆரம்பம்

மன்னார், ஒக். 27

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மன்னார் சென்.விக்டரி விளையாட்டு மைதானம் புனரமைப்புக்காக ஐம்பது லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், குறித்த விளையாட்டு மைதானத்தின் அதன் ஆரம்ப வேலைத்திட்டத்தை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் நேற்று செவ்வாய்க்கிழமை காலை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்துக்கு அமைய இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சினால் முன்னெடுக்கப்படும் கிராமிய விளையாட்டு மைதானங்களை புனரமைக்கும் வேலைத் திட்டத்துக்கு அமைய குறித்த விளையாட்டு மைதானம் புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஆரம்ப நிகழ்வில் மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப், பேசாலை புனித வெற்றி நாயகி ஆலய பங்குத்தந்தை அருட்பணி ஞானப்பிரகாசம் அடிகளார், பிரதேச சபை உறுப்பினர்கள், விக்டரி விளையாட்டு கழக உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# ரஞ்சன் ராமநாயக்க விரைவில் விடுதலை செய்யப்படவேண்டும்

## சிறைக்கு சென்று சுகம் விசாரித்த சஜித் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 27

**ரஞ்சன் ராமநாயக்க தற்போது பாராளுமன்றத்தில் இல்லாதது பாரிய குறைபாடாகும்., எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலஞ்ச, ஊழல்களுக்கு எதிராகக் குரல்கொடுத்து வந்த ரஞ்சன் ராமநாயக்க விரைவில் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் தண்டனை அனுபவித்துவரும் ரஞ்சன் ராமநாயக்கவை நலம் விசாரிப்பதற்காக அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சென்றிருந்தார்.

வெளியே வந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"ரஞ்சன் ராமநாயக்கவுக்கு



எதிராக நிதி மோசடி, இலஞ்ச - ஊழல் குற்றச்சாட்டுகள், மக்களின் சொத்துக்களை சூறையாடிய குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படவில்லை. அவர் தன்னிடமுள்ள சொத்துகளைக் கூட பொதுமக்களுக்காக அர்ப்பணிப்பு செய்யக்கூடிய மனிதாபிமானமிக்கவர்.

மக்களின் நலனுக்காகச் செயலாற்றும் நற்பண்பு ரஞ்சன் ராமநாயக்கவுக்கு இருக்கின்றது. அவர் பிரச்னைக்குரிய சூழ்நிலைகள் உருவான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சிறிதளவுகூட சிந்திக்காமல் மக்களுக்காக முன்வந்தவர்" - என்றார். (இ)



## அம்பாறை மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி ஏற்றும் பணி

அம்பாறை, ஒக். 27

அம்பாறை மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கான பைசர் தடுப்பூசி ஏற்றும் பணிகள் நேற்றும் முன்னெடுக்கப்பட்டன.

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய தேசியப் பாடசாலையில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி ஏற்றும் பணிகள் வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.ஐ.எம்.கபீர் தலைமையில் முன்னெடுக்கப்பட்டன.

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இதுவரை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் 732 மாணவர்களுக்கும், அல்-மர்ஜான் மகா வித்தியாலயத்தில் 156 மாணவர்களுக்கும், வீரமுனை இராம கிருஷ்ண மகா வித்தியாலயத்தில் 41 மாணவர்களுக்கும், கோரக் கோயில் தமிழ் மகா வித்தியாலயத்தில் 14 மாணவர்களுக்கும், அல்- அர்ஷத் மகா வித்தியாலத்தில் 38 மாணவர்களுக்கும், ஸாஹிரா மகா வித்தியாலயத்தில் 42 மாணவர்களுக்கும், தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயத்தில் 89 மாணவர்களுக்கும், விபுலானந்த மகா வித்தியாலயத்தில் 82 மாணவர்களுக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளன. (இ)

## எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படாது!

கொழும்பு, ஒக். 27

நாட்டில் தற்போது எரிபொருளுக்குப் பற்றாக்குறை இல்லை எனவும், எதிர்காலத்திலும் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படாது எனவும் அமைச்சரவை இணைப் பேச்சாளரான அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டில் 8 மாதங்களுக்குத் தேவையான பெற்றோல் மற்றும் டீசலை சிங்கப்பூரில் இருந்து பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் ஓகஸ்ட் 31ஆம் திகதி வரை 8 மாதங்களுக்குத் தேவையான பெற்றோல் மற்றும் டீசலுக்கான ஒப்பந்தம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சர் உதய கம்மன்பில சமர்ப்பித்தார்.

இதற்கமைய, சிங்கப்பூர் நிறுவனத்திடமிருந்து எரிபொருள் பெறப்படவுள்ளது" - என்றார்.

## விசேட சுற்றிவளைப்புகளில் 4 பேர் வசமாக சிக்கினார்கள்

கொழும்பு, ஒக். 27

விசேட சுற்றிவளைப்புகளில் போதைப்பொருள் மற்றும் துப்பாக்கியுடன் 4 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

காலி, எல்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏன்கந்துர பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், உள்நாட்டுத் துப்பாக்கியுடன் கனேகொடை பிரதேசத்தை சேர்ந்த 28 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, பொரளை, மகசின் வீதி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், 5 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயினுடன் பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை வடக்கு, சமகிபுர சந்திக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், 20 கிராம் 400 மில்லிகிராம் ஹெரோயினுடன் வாத்துவ பிரதேசத்தை சேர்ந்த 26 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, கெஸ்பேவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில், 02 கிலோகிராம் 02 கிராம் கேரள கஞ்சாவுடன் இராஜகிரிய பிரதேசத்தை சேர்ந்த 54 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த பகுதியில் பயணித்த லொறியொன்றை வழிமறித்துச் சோதனையிட்டபோதே கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (இ)

## சுமந்திரனுக்கு...

குருநகர் மற்றும் வல்வெட்டித்துறை கடற்றொழிலாளர்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை நேற்று காலை முதல் முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டோர் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனின் உருவ பொம்மையையும் எரித்து தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் உள்ளூர் இழுவை மடித் தொழிலும் நிறுத்தப்படவேண்டும் என கருத்து வெளியிட்டதுடன், கடற்றொழில் அமைச்சர் இழுவைமடி தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டும் என கோரி போராட்டமொன்றையும் முன்னெடுத்திருந்தார்.

நேற்று வல்வெட்டித்துறை, குருநகர் பகுதிகளில் உள்ளூர் இழுவைமடி தொழில் செய்யும் மீனவர்கள் சுமந்திரனுக்கு எதிராகப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்க முன்றலில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, குருநகர் பகுதியில் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டு கடைகள் அனைத்தும் மூடப்பட்டு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

சுமந்திரனுக்கு எதிரான கோஷங்கள் எழுப்பப்பட்டு மீனவர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு போராட்டத்தின் முடிவில் சுமந்திரனின் உருவப் பொம்மைக்கு பழைய செருப்பு மாலை அணிவிக்கப்பட்டது. பின்னர் பெற்றொல் ஊற்றி சுமந்திரனின் உருவப் பொம்மை எரிக்கப்பட்டதோடு சுமந்திரனின் உருவப் பொம்மையை சிலர் தடிகளால் தாக்கினர். (அ-03)

## அழுது புலம்பும்...

காளிக்கட்சி உறுப்பினர்கள் ஊடகங்களுக்கு முன்னால் வந்து அறிவிப்புகளை விடுத்தாலும், அமைச்சரவைக் கூட்டத்தில் ஒன்றும் கதைப்பதில்லை. எமது நாட்டுக்கு எதிரான உடன்படிக்கைகளுக்கு எதிராக ஒரு வழக்கைக்கூட தொடுத்தது கிடையாது. வளங்களைக் காக்க போராடுவதும் இல்லை.

எனினும், ஏதேனும் ஒரு வாய்ப்பு கிடைத்தால், தமக்கு கவனிப்பு இல்லை, தமது கோரிக்கைகள் செவிமடுக்கப்படுவதில்லை, பேச்சுக்கு நேரம் ஒதுக்கப்படுவதில்லை என்றெல்லாம் அழுது புலம்புகின்றனர். இவர்களுக்கு தன்மானம் மற்றும் அரசியல் தனித்துவம் இருக்குமானால் இவ்வாறு ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லை. அரசியலிலிருந்து வெளியேறலாம் -என்றார். (அ)

## பல்கலைக்...

வழங்கப்பட்டுள்ளது.

எனினும், கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் திகதியை தீர்மானிக்கும் அதிகாரம் அந்தந்தப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

"முதல் கட்டத்தின் கீழ், 2 வாரங்களுக்கு கோவிட்-19 தடுப்பூசியின் இரண்டு அலகுகளையும் போட்ட மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கழகங்களுக்குள் நுழைய அனுமதிக்கப்படுவர்.

கல்வி நடவடிக்கைகளில் முதலில் 25 வீதமான மாணவர்களே பங்கேற்க வேண்டும்" என்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க மேலும் தெரிவித்தார். (ஐ)

## இலங்கை...

களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"மீனவர் பிரச்னை தொடர்பில் இராஜதந்திர ரீதியில் இந்திய அரசுடன் இலங்கை அரசு தொடர்ச்சியாகப் பேசி வருகின்றது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக இலங்கை - இந்திய கடல் எல்லைகள் அடையாளமிடப்படாத ஒன்றாக இருப்பதால், இந்திய மீனவர்கள் எமது கடலுக்குள் தெரிந்தோ தெரியாமலோ நுழைகின்றனர்.

எனினும், இந்த விடயத்தில் நாடுகளுக்கு இடையிலான நட்புறவுகளைப் பாதுகாத்து, இராஜதந்திர ரீதியில் செயல்பட்டே தீர்வுகாண வேண்டும்" - என்றார். (இ)

## பிஸ்டல் ரவை...

விப் பிரிவுக்கு தொலைபேசி ஊடாக வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் வீடொன்றில் நேற்று மாலை முன்னெடுக்கப்பட்ட சோதனையில் கைத்துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் 6 ரவைகள் கைப்பற்றப்பட்டன.

அவற்றை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் அங்கு வசிப்பவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சந்தேக நபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-02)

## இலங்கையின்...

படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் இந்திய ரயில்துறை பயன்படுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சியை நேற்று சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் ரயில் போக்குவரத்து துறையை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்து இரு தரப்புக்களுக்கும் இடையில் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் இந்திய உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து அமைச்சர் பவித்ரா விளக்கம் அளித்துள்ளார்.

இலங்கை ரயில் சாரதிகளுக்கு இந்தியாவில் பயிற்சி வழங்கவும் இந்த சந்திப்பின்போது இணக்கம் காணப்பட்டுள்ளது. (அ)

## தடுப்பூசி...

உரிமையில்லை என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறினார்.

இந்நிலையில் கோவிட் தடுப்பூசி ஒன்றைக் கூட இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் பொது இடங்களில் கூடுவதைத் தடுக்கும் வகையிலான சட்டங்களை அறிமுகப்படுத்துவது குறித்து பரிசீலிப்பதாக அவர் தெரிவித் தார்.

ஐரோப்பாவிலும் இது போன்ற சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, கொரோனா வைரஸின் அச்சுறுத்தல் இன்னும் தொடர்வதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றத் தவறினால், மீண்டும் கடுமையான கட்டுப்பாடுகளை அமுல்படுத்த வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் கூறினார். (அ)

## கொரோனா...

ஒரு பெண்ணுமாக 2 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 7 ஆண்களும் 4 பெண்களுமாக 11பேரும் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 654 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## அதிகார...

சபாநாயகர், பிரதம நீதியரசருக்கு அடுத்து மத்திய வங்கி ஆளுநர் அதிகார முன்னுரிமை பெற்றுள்ளார்.

நாட்டின் 20ஆவது மத்திய வங்கி ஆளுநரான அஜித் நிவாட் கப்ராலுக்கு நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அமைச்சரவை அமைச்சரின் பதவிநிலை வழங்கப்பட்டுள்ளது. (அ)

# மக்களால் விரட்டப்படவுள்ள அரசுடன் இணையமாட்டேன்

## அடித்து சொல்கிறார் ஹேஷா விதானகே

கொழும்பு, ஒக். 27

"இந்த அரசின் கதை முடியப்போகின்றது. அரசை விரட்டியடிப்பதற்கு மக்கள் தயாராகிவிட்டனர். எனவே, இப்படியானதொரு அரசியல் நான் இணையமாட்டேன்." - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே நேற்று அறிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

கட்சியின் தொகுதி அமைப்பாளர் பதவியை நான் இராஜினாமா செய்தது உண்மையே. இது தொடர்பில் செயலாளருக்கு தெரியப்படுத்தியிருந்தேன். பிரச்னைகள் தொடர்பில் கட்சிக்குள் பேச்சு நடத்தி தீர்வை பெற முற்பட்டேன்.

எனினும், இந்த விடயத்தை ஊடகங்களில் அம்பலப்படுத்தியது யார்? ஐக்கிய மக்கள் சக்திக்குள் சூழ்ச்சிக்காரர்கள் உள்ளனர். அவர்களை சஜித் பிரேமதாஸ இனங்காண வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் முன்னோக்கி பயணிக்க விடமாட்டார்கள். அன்று ரணிலுடன் இருந்து 'டீல்' அரசியல் செய்தவர்கள் இன்று எமது அணியிலும் உள்ளனர்.

இந்த அரசின் கதை முடியப்போகின்றது. இது சிறு பிள்ளைகளுக்கும் தெரியும். நிலைமை அப்படி இருக்கையில் நான் எப்படி அரசியல் இணைவேன்? மக்களுக்கான எனது அரசியல் பயணம் தொடரும். மக்களுடனேயே எனக்கு 'அரசியல் உடன்படிக்கை' உள்ளது." - என்றார். (அ)

# "சீனா நட்பு நாடு என்பதற்காக தரம் குறைவானதை ஏற்கோம்!"

கொழும்பு, ஒக். 27

நட்பு நாடு என்பதற்காக தரம் குறைவான சீன உரத்தை நாட்டுக்குள் அனுமதிக்க இயலாது என்பதை சீன அரசாங்கத்திற்கு தெளிவாக அறிவித்துவிட்டோம். இவ்விடயத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை.

தரம் குறைவான உரத்தை இறக்குமதி செய்வது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பல்ல என்று அமைச்சரவை இணை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதன்போது, சீன இரசாயன உர கப்பல் மீண்டும் நாட்டுக்கு வருகை தந்துள்ளமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கேள்வியெழுப்பப்பட்டபோதே இவ்வாறு பதிலளித்த அமைச்சர்,

சீன இரசாயன கப்பல் மீண்டும் நாட்டுக்கு வருகை தந்துள்ளமை தொடர்பில் இவ்வாரம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அவதானம் செலுத்தப்படவில்லை. எவ்வாறிருப்பினும் தரத்தில் குறைவான குறித்த இரசாயன உரத்தைக் கொண்ட கப்பல் கொழும்பு துறைமுகத்திற்குள் பிரவேசிப்பதைத் தடுக்குமாறு துறைமுக அதிகாரசபையின் தலைவர் நிஹால் கெப்பிட்டிபொல அறிவித்துள்ளார்.

எனவே, குறித்த கப்பல் இலங்கை துறைமுகத்திற்குள் பிரவேசிப்பது தற்போது தடுக்கப்பட்டுள்ளது. இலங்கை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தரத்தில் குறைந்த இந்த உரத்தை கொள்வனவு செய்ய தயாராக இல்லை என்று தெளிவாக அறிவித்துள்ளோம்.

இவ்விடயத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. தரக்குறைவான உரத்தை இறக்குமதி செய்வது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பல்ல. எனவேதான் அவசர கொள்வனவாக திரவ நனோ நைதரசன் உரம் இறக்குமதி செய்யப்பட்டது.

வெளிநாட்டு கொள்கைகளின் அடிப்படையில் இலங்கை ஏனைய அனைத்து நாடுகளுடனும் நட்பு நாடாகவுள்ளது. எதிரிகள் என எவரும் இல்லை. நாம் கூட்டணி நாடும் அல்ல. வரலாற்று ரீதியில் இலங்கை - சீனா என்பன நட்பு நாடுகளாகும். சீனாவுடன் வலுவான உறவு காணப்படுகிறது. அதற்காக தரம் குறைவான பொருட்களை இறக்குமதி செய்ய முடியாது.

அதன் அடிப்படையிலேயே தரம் குறைவான உரத்தினை இறக்குமதி செய்ய முடியாது என்ற எமது நிலைப்பாட்டை சீன அரசாங்கத்திற்கு தெளிவாக அறிவித்துள்ளோம் - என்றார். (ஐ)

# மகாஜன கல்லூரி பரிசளிப்பு விழா!

யாழ்ப்பாணம், ஒக். 27

தெல்லிப்பழை மகாஜன கல்லூரி பரிசளிப்பு விழாவும், மகாஜன சிற்பி தெ. து. ஜயரத்தினம் நினைவுதினமும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் மங்களம் மணிசேகரன் தலைமையில் நிகழ்நிலை நிகழ்வாக இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக திருமதி ஜெயபவானி விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக கனகரத்தினம் புவனசந்திரா, மயில்வாகனம் சூரியசேகரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நினைவுப் பேருரையை சச்சிதானந்தம் கோபிநாத் ஆற்றவுள்ளார். ஆசியுரையை கலாநிதி ஆறு. திருமுருகன் வழங்குவார்.

இந்த நிகழ்வை சூம் செயலி மூலம் 829 6774 9996 என்ற அடையாள எண்ணை பயன்படுத்தி நேரலையில் பங்கேற்க முடியும். (ஐ)

## வடமராட்சியில்...

இந்த சம்பவம் குறித்து நேற்றிரவு முதல் கட்டமாக கிடைத்த தகவல்களின் அடிப்படையில் மேலும் அறியவருவதாவது,

புலோலி - கொடிகாமம் வீதியால் பயணித்த மோட்டார் சைக்கிள் முள்ளிப் பாலத்துடன் மோதுண்ட நிலையில் ஒருவர் காயங்களுடன் கிடக்கிறார் என்று நெல்லியடி பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

அங்கு சென்ற பொலிஸார் காயங்களுக்குள்ளானவரை மீட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-02)

# 554 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஒக். 27

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி யான மேலும் 554 பேர் நேற்று அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 37 ஆயிரத்து 201 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 300 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 4 ஆயிரத்து 3 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

ஈழநாடு
Eelanadu

# மேற்கிந்தியா மீண்டும் தோல்வி! தென்னாபிரிக்க அணி வெற்றி!!

*டுபாய், ஒக். 27*

நடப்பு சம்பியனான மேற்கிந்தியத் தீவுகள் அணி தொடர்ச்சியாக இரண்டாவது தோல்வியை சந்தித்துள்ளது. இதனால் இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரிலிருந்து வெளியேறும் நிலையை நோக்கி அந்த அணி செல்கிறது.

இந்தத் தோல்வியால் அடுத்த மூன்று போட்டிகளிலும் கட்டாய வெற்றி பெறவேண்டிய இக்கட்டில் மேற்கிந்தியத் தீவுகள் அணி உள்ளது. அதேநேரத்தில் மற்றைய அணிகளின் வெற்றி - தோல்விகளும் மேற்கிந்தியாவின் அரையிறுதி வாய்ப்பில் செல்வாக்கு செலுத்தும் என்று கருதப்படுகின்றது.

உலகக் கிண்ணத் தொடரின் சுப்பர் - 12 சுற்றில் நேற்றிரவு டுபாயில் நடந்த போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் - தென்னாபிரிக்க அணிகள் மோதின. “கறுப்பினத்தவர் வாழ்வு முக்கியம்“ என்ற போராட்டத்துக்கு ஆதரவாக முழங்காலில் அமர மறுத்து இந்தப் போட்டியிலிருந்து குயின்ரன் டி கொக் விலகியிருந்தார்.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்யவே, முதலில் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் 20ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 143 ஓட்டங்களைப் பெற்றது.

இலகுவான இலக்கைத் துரத்த ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி 18.2 ஓவர்களில் 2 விக்கெட்களை மட்டும் இழந்து 144 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்க அணிக்கு அய்டன் மார்க்ரம் 25 பந்துகளில் வேகமான அரைச்சதத்தை எட்டினார். அவர் ஆட்டமிழக்காமல் 4 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 51 ஓட்டங்களை எடுத்திருந்தார். இதுபோன்று ரஸ்ஸி வான் டெர் டுசான் 43 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றிருந்தார். இவர்கள் இருவரும் மூன்றாவது விக்கெட்டுக்காக 83 ஓட்டங்களை இணைப்பாட்டமாக சேர்த்தனர்.

எனினும், தென்னாபிரிக்க அணி சரியாக துரத்தலை தொடங்கவில்லை. தொடக்க வீரராக களமிறங்கிய பவுமா 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். முதல் ஓவரிலேயே அவர் ரன்அவுட் ஆனார். அவருடன் களமிறங்கிய ரீஷா ஹென்றிக்ஸ் 39 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகளின் அணி பலமான துடுப்பாட்ட வீரர்களை கொண்டிருந்தாலும் அதனால் பெரிய இலக்கை நிர்ணயிக்க முடியவில்லை. எப்போதும் அதிரடிக்கு பெயர்பெற்ற மேற்கிந்தியத்தீவுகளின் வீரர்கள் மிக மெதுவான ஆட்டத்தையே வெளிப்படுத்தினர்.

தொடக்க வீரரான லெண்டல் சிம்மன்ஸ் 35 பந்துகளை எதிர்கொண்டு 16 ஓட்டங்களை பெற்றார். அவர் ஒரு பௌண்ட்ரிகூட அடிக்கவில்லை. எனினும், மறுமுனையில் ஆடிய எவின் லூயிஸ் சிம்மன்ஸுக்கு நேர்மாறாக ஆடினார். அவர் 35 பந்துகளில் 6 சிக்ஸர்களை பறக்கவிட்டும், 3 பௌண்ட்ரிகளை விளாசியும் 56 ஓட்டங்களை குவித்தார்.

அணித் தலைவர் கிரன் பொலார்ட் 20 பந்துகளில் 26 ஓட்டங்களை சேர்த்தார். ஆனால், கடைசி 4 ஓவர்களில் 5 விக்கெட்கள் வீழ்த்தப்படவே, மேற்கிந்தியத் தீவுகள் அணி தட்டுத்தடுமாறியது. டுவைன் பிறேரோறிஸ் 3 விக்கெட்களையும், கேசவ் மஹராஜ் 2 விக்கெட்களையும் தென்னாபிரிக்க அணிக்காக வீழ்த்தினர்.

4 ஓவர்கள் வீசி 14 ஓட்டங்களை கொடுத்து ஒரு விக்கெட்டை வீழ்த்தி திருப்பு முனையை ஏற்படுத்திய நோர்ட்ஜே போட்டிநாயகனாக தெரிவானார். (ஐ)



# பாகிஸ்தான் அணி வெற்றி!

*சார்ஜா, ஒக். 27*

ரவூப்பின் வேகத்தில் நியூசிலாந்து வீரர்கள் தடுமாற, இறுதியில் 5 விக்கெட்களால் வெற்றி பெற்றது பாகிஸ் தான் அணி.





உலகக் கிண்ணத்தில் சார்ஜாவில் நேற்றிரவு நடந்த போட்டியில் பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகள் களமிறங்கின.

போட்டி ஆரம்பிக்க ஒரு மணி நேரம் முன்னதாக பயிற்சியில் ஏற்பட்ட காயம் காரணமாக பெர்குஷன் தொடரிலிருந்து வெளியேறினார்.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபட்டது. இதனால், நியூசிலாந்து அணி முன்னதாக துடுப் பெடுத்தாடியது. 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 134 ஓட்டங்களை பெற்றது.

இலகுவாக வெற்றி பெற்றுவிடும் என்று கணிக்கப்பட்ட நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி தடுமாறியது. அந்த அணி 8 பந்துகள் மீதமிருந்த நிலையில் 5 விக்கெட்களை இழந்த நிலையில் 135 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

முஹமட் ரிஸ்வான், பாபர் அஸாம் இணை தொடக்கம் கொடுத்தது. பவர்பிளேயிலேயே முதல் விக்கெட்டை இழந்தது பாகிஸ்தான். அணித் தலைவர் பாபர் அஸாம் 9 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து பஹார் ஷாமன் 11, முஹமட் ஹபீஸ் 11 என விக்கெட்களை வேகமாக இழந்தனர்.

தொடக்கம் கொடுத்த முஹமட் ரிஸ்வான் பொறுமையாக 5 பௌண்ட்ரிகளுடன் 33 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

நடுவரிசை வீரர்கள் வேகமாக ஆட்டமிழந்த நிலையில் அனுபவ வீரர் சொஹைப் மலிக் பொறுப்புடன் ஆடினார். அவருடன் இணைந்த ஆசிப் அலி அதிரடி காட்டினார். மலிக் ஒரு சிக்ஸர், 2 பௌண்ட்ரிகளுடன் 26 ஓட்டங்களையும் ஆசிப் அலி 12 பந்துகளில் 3 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 27 ஓட்டங்களையும் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு தொடக்கம் கொடுத்த மார்ட்டின் குப்தில் - டரில் மிற்செல் இணை ஓரளவுக்கு பொறுப்பாக ஆடியது. எனினும், மெதுவான ஆட்டத்தையே அவர்கள் வெளிப்படுத்தினர். குப்தில் 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த நிலையில் அணித் தலைவர் கேன் வில்லியம்சன் களமிறங்கினார். அவரும் வழக்கம்போல் பொறுமையான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இதனால், அணியின் ஓட்ட எண்ணிக்கை மந்த கதியிலேயே உயர்ந்தது. மிற்செல் 2 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 27 ஓட்டங்களை சேர்த்து ஆட்டமிழந்தார். வில்லியம்சன் 25 ஓட்டங்களையே சேர்த்தார். இறுதிக்கட்ட ஓவர்கள் பரபரப்படைய இறுதி 4 ஓவர்களில் 4 விக்கெட்கள் வீழ்த்தப்பட்டன.

ஹரிஸ் ரவூப் 4 விக்கெட்களை கைப்பற்றினார். அவரே போட்டியின் நாயகனாகவும் தெரிவானார். (ஐ)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.10.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்

6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்

6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்

6.55 மணி : இன்றைய ராசி பலன்

7.15 மணி : கதை வழி அறமொழி



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்

7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்

8.30 மணி : காலை செய்திகள்

9.00 மணி : கலாட்டா காலை-நேரலை

10.30 மணி : தொடர்நாடகம்

11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )

1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-மயக்கம் என்ன முத்துக்கு முத்தாக திரைப்படங்களின் காட்சிகள்

4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்

6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**

07.00 மணி : பாரதீ

08.00 மணி : இரவுச் செய்திகள்

9.00 மணி : துறைக்கு அப்பால்



09.30 மணி: பத்துக்கு 10

10.00 மணி : நேருக்கு நேர்

DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி

8.00 மணி : சிரிப்பு சரடிவெடி

10.00 மணி : ஒரு பட கொமடி

11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்

3.00 மணி : குண்டக்க மண்டக்க

5.00 மணி : ஒரு பட கொமடி

6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி

9.00 மணி : சிரிப்போ சிரிப்பு

10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்

7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்

8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்

9.00 மணி : மெல்லிசை

10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி

1.00 மணி : விசை இசை

3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)

4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)

5.00 மணி : இனிது இனிது

6.00 மணி : என்றென்றும் இசை

7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்

9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்

6.00 மணி : தரம் 07 - தமிழ்

6.45 மணி : தரம் 08 - தமிழ்

7.30 மணி : தரம் 09 - கணிதம்

8.15 மணி : தரம் 10 - கணிதம்

9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்

10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி

11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்

1.00 மணி : தரம் 07 - தமிழ்

2.00 மணி : தரம் 08 - தமிழ்

3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்

3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்

4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்

5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்

5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்

6.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

ஓம் ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்

6.00 மணி : சுப்ரபாதம்

6.30 மணி : சுப்ரபாதம்

07.00 மணி : இன்றைய சிந்தனை

07.05 மணி : இன்றைய நாள்

07.30 மணி : மங்கள இசை

08.00 மணி : அருளுரை

08.30 மணி : திருவாசகம்

09.00 மணி : திருவிழா-01

10.00 மணி : பாடல்கள்

10.30 மணி : பஜனை

11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி

12.30 மணி : திருவிழா-02

6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி :செய்திகள்

7.30 மணி : அருளுரை

CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை

8.00 மணி : ஜெபமாலை

09.30 மணி : மன்றாடு

10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

11.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம் திங்கள்)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)

01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)

03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)

05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)

06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்

7.00 மணி : இறை சிந்தனை

7.30 மணி : இஸ்லாமிய பாடல்

8.00 மணி : கலந்துரையாடல்

9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்

10.00 மணி : மனதோடு பேசலாம்

10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்

11.00 மணி : சுவனப்பாதை

11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்

12.30 மணி : இஸ்லாமிய வரலாறு

1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்

2.00 மணி : கஸீதா

2.30 மணி : இறை சிந்தனை

3.00 மணி : பாடல்கள்

3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்

4.00 மணி : சிறுவர் இஸ்லாமிய கார்ட்டூன்

5.00 மணி : இறை தென்றல்

6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்

8.00 மணி : இஸ்லாமிய வரலாறு